# திராவிடநாடு

12—10—58 | வார வெளியீடு | விலை 16 காசு


# பிரித்திடுவோம் திராவிடத்தை

[ களிற்றண்ணல் ]

தேன்கொழிக்கும் திராவிடமாம் தென்ன கத்தைத்
திருநாடாய்ப் போற்றிவரும் மக்காள் கேளீர்!
வான்பொழியும் மழையெல்லாம் வரையி னின்றும்
வழிந்தோடிக் கடலணைந்து வீணாய்ப் போகும்.
கான்யாறு ஓடுகின்ற வடவர் நாட்டைக்
கவினுற்ற நன்னாடாய் ஆக்கி விட்டார்
ஏனின்னும் திராவிடத்தில் எதையும் செய்ய
இயலாமல் இருக்கின்றீர் என்று கேட்டால்;

"ஐந்தாண்டுத் திட்டத்தில் பக்ரா நங்கல்
அணைபோடும் வேலையின்னும் முடிய வில்லை
இந்நாட்டின் பொதுமொழியாய் இந்தி தன்னை
இருக்கவிடம் செய்வதற்கே ஓய் வில்லை
நம்நாட்டுத் தூதர்களுக் கின்ப வாழ்க்கை
நாமமைத்துக் கொடுப்பதற்கே நாளு மில்லை
இந்நாளில் இயலாது எதையும் செய்ய
இனிவருமோர் திட்டத்தில் இயற்று விப்போம்"

என்றுசொல்லி அன்றுநமை ஏய்த்து விட்டார்
ஏங்கிமுறை யிட்டோரைத் தூங்க வைத்தார்
இன்றுமொரு திட்டமுமே துவங்கி விட்டார்
இதிலேயும் சென்னைக்கு நாம மிட்டார்
என்றுமொரு நெய்வேலித் திட்டங் காட்டி
ஏமாற்றப் பார்க்கின்றார் நம்மை வாட்டி.
நன்றாக நம்வாழ்வு அமைய வேண்டில்
நல்வழியில் பிரித்திடுவோம் திரா விடத்தை.

# வஞ்சிக்கப்படும் தென்னாடு!

[ பா. சரவணன் ]

"சென்னை அரசியலார் 13-திட்டங்கள் இரயில்வே அபிவிருத்திக்குச் சிபாரிசு செய்து டில்லி சர்க்காருக்கு அனுப்பியவை ஒன்றும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை" இது நிதியமைச்சர் தெரிவித்துள்ள செய்தி.

இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் போக்குவரத்தின் அபிவிருத்திக்கு ஒதுக்கியுள்ள தொகை ரூ. 1385-கோடி.

இரயில்வே அபிவிருத்திக்கு ரூ. 900-கோடி.

சாலைகள், சாலை போக்குவரத்திற்கு ரூ. 266-கோடி.

கப்பல் கட்டுவதற்கு, துறைமுகங்களுக்கு ரூ. 100-கோடி.

விமானப் போக்குவரத்திற்கு ரூ. 43-கோடி.

செய்தித்துறை ஒலிபரப்பிற்கு ரூ. 76-கோடி.

எனத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

தென்னகமொழிமாநிலங்களான சென்னை, ஆந்திரா, கேரளம், கன்னட மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள்:

| | | |
|---|---|---|
| சென்னை | 807·50 | இலட்சம் |
| ஆந்திரம் | 546·71 | ,, |
| கேரளம் | 317·30 | ,, |
| கன்னடம் | 475·00 | ,, |

செலவு செய்யப்படும் தொகை ரூ. 138492·89-இலட்சம். அதில் தென்னகத்திற்கு ரூ. 2146·51. ஏறக்குறைய ரூ. 21½-கோடி. ஒதுக்கியுள்ள தொகை ரூ. 1385-கோடி. தென்னகத்தில் அபிவிருத்திக்கு ரூ. 21½-கோடி. ஏன் இந்த வேற்றுமை? மக்கள் தொகை 40-கோடி எனக் கொண்டாலும், தென்னகத்தில் வாழும் மக்களின் தொகை 10-கோடி இருக்கக் கூடும். ஒதுக்கியுள்ள தொகையில் 4-ல் ஒரு பங்கு ஏன் ஒதுக்கக் கூடாது. எல்லைப் பரப்பளவு எனக்கொண்டாலும் இடைக்க வேண்டிய தொகை அதிகம். வஞ்சனை ஏன்?

குறுகிய இரயில்வேத்தொடரை (Metregauge) அகலப்பாதை (Broadgauge) யாக செய்வது; மின்சார உதவியுடன் இரயில் செல்ல வசதிசெய்வது, டீசல் என்ஜின் பொருத்தி இரயில் செல்ல வசதிசெய்வது; புதிய இரயில் வேத் தொடர்கள் அமைப்பது, பழைய இரயில்வேத்தொடர்களைப் புதுப்பித்தல்; இரயில் என்ஜின்கள் உற்பத்தி செய்வது; வாகன்கள் இரயில் பெட்டிகள் உற்பத்தி செய்வது; திட்டத்தின் நோக்கங்கள்!

புதிய இரயில்வேத் தொடர்கள் 842-மைல்கள் அமைக்கப்படும் எனத் திட்டம் அறிவிக்கிறது.

கிழக்கு இருப்புப்பாதை:-

| | |
|---|---|
| பெரேசட்—பசிரட் | 44 |

தென்கிழக்கு இருப்புப்பாதை:-

| | |
|---|---|
| பர்க்காகான—பிர்மித்தராபூர் | 124 |
| ரூர்கலா--தால்தீ--துரமாரோ | 30 |
| நௌமுந்தி—பன்சாபரணி | 18 |
| பிலாய்—தாலிராஜ்ஹாரா | 60 |
| கூவா—மனோகர்பூர் | 30 |
| கரன்பூரா—ரம்கார்க் | 75 |
| மத்திய இந்தியா நிலக்கரி சுரங்கம் | 125 |
| கொர்பா விஸ்தரிப்பு | 5 |

மத்திய இருப்புப்பாதை:-

| | |
|---|---|
| குணா-உஜ்ஜெய்ன் | 175 |

வடக்கு இருப்புப்பாதை:-

| | |
|---|---|
| ராபர்ட்ஸ்கன்ஜ்-கர்வாரோடு | 100 |

வடகிழக்கு இருப்புப்பாதை:-

| | |
|---|---|
| முஜாபர்பூர்-தர்பங்கா | 35 |
| ரம்ஜெய்-பின்னகுரி | 20 |
| | 842 |

842 மைல்களுக்கு அமைக்கப்படும் இரயில் தொடர்கள் அத்தனையும் வடநாட்டில். தென்னாட்டில் ஒரு மைல்கூடப் புதிய இரயில் தொடர் அமைக்கும் திட்டம் இல்லை. சில நாள் கூத்திற்கு ஆவடியிலிருந்து சத்தியமூர்த்தி நகருக்குபோடப்பட்டது. அதனால் காங்கிரஸ் கட்சியின் மாநாட்டிற்கு உதவியதேயன்றி வேறெதற்குப் பயன்பட்டது?

"தென்னகத்திற்கு உரிய இரும்பு உருக்கு சப்ளை உரிய காலத்தில் அனுப்பிவைக்க இரயில்வசதி குறைவாகஇருக்கிறது" என டாடா தூத்துக்குடியில் பேசிய நேரத்தில் குறிப்பிட்டார். "தென்னகத்தில் இருப்பவர்கள் ஒன்றுகூடி மத்திய அரசியலாரை வற்புறுத்த வேண்டும்" என்றும் பேசினார்.

சென்னை அரசியலாரின் திட்டத்தையே நிராகரிக்கிறது மத்திய அரசு. ஆயினும் முதலமைச்சர் காமராசர் பேசுகிறார் "நாடு முன்னேற நாம் நேருஜி தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளோம், நாட்டிற்குத் தேவையான நல்ல திட்டங்களை எதிர்க்கட்சிகள் எடுத்துக் கூறாமல் தொல்லை தருகின்றனர்," என்று. காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர்களில் ஒருவர், சென்னை மாநிலத்தின் முதலமைச்சர் காமராசர். அவரது அரசு சிபாரிசு செய்து அனுப்பிய திட்டங்களே காங்கிரஸ் கட்சியின் மத்திய அரசு நிராகரிக்கிறதுஎன்றால், எதிர்க்கட்சியின் திட்டங்கள் என்னவாகும்? நேருஜியின் தலைமையில் தமிழகம் காணும் இரயில்வேயின் அபிவிருத்தியின் முன்னேற்றமும் இதுதான்!

ரூ 10 கோடியளவில் பெரம்பூரில் இரயில்பெட்டி தொழிற்சாலையைப் பாரீர் என்கிறார்கள். செலவு செய்யும் தொகை ரூ. 900-கோடி என்பதையும் பார்க்கிறோம். இதைப் பாரீர்என்று கூறினால்'பிரிவினையை வெறுத்தவன் பாரதி' என்று துணைக்கழைக்கிறார் நிதியமைச்சர் பாரதியாரை. கல்வியமைச்சர் வினாவிற்கு ஏற்ற விளக்கம் தருகிறார்!!

★

# விழாவும் விளைவும்

ர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [12–10–58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 13

சென்ற கிழமை முழுவதும் ஒரே விழாக்கோலம். நாடு, நகரம் எங்கும் விழா என்பதே பேச்சாக இருந்தது. எதற்கு இந்த அலங்காரம், என்ன விழா இது என்று இனந்தெரிந்து சொல்ல இயலாத வகையில் விழா மலிவுப் பொருளாக இருந்திடக் கண்டோம். விழா என்ற சொல்லுக்கே, சிறப்புடன் நடைபெறும் நிகழ்ச்சி என்று பொருள். ஆனால் இன்றைய தினம் நாட்டில் நித்த நித்தம் நிகழும் விழாக்கள் அந்தச் சிறப்பினை இழந்து சாதாரண நிகழ்ச்சியாக மாறிவரக் காண்கிறோம். எதற்கெடுத்தாலும் ஒரு விழாக் கொண்டாடிவிட்டால் போதும் என்று கருதுகின்ற நிலைமைக்கு ஆட்சியாளர் வந்திருக்கின்றார்கள்.

மரியாதைக்கு ஒரு விழா, மரம் நட ஒரு விழா, கைத்தறிக்கு ஒரு விழா, கதருக்கு ஒரு விழா என்று விழா நடத்திவிட்டால் அது ஏதோ செயற்கரிய செய்ததாகிவிடும் என்று எண்ணியிருப்பதாகத் தோன்றுகின்றது. அவர்கள் அப்படி எண்ணுகின்றனரோ, அல்லது நாட்டு மக்கள் அப்படி எண்ணி ஏமாந்து போவார்கள் என நினைக்கின்றனரோ தெரியவில்லை.

அந்த நினைப்பில்தான் இந்தக் கிழமை காந்தியின் நினைவு விழாவினைக் கொண்டாடியிருக்கின்றனர், காங்கிரஸ் கட்சியினர்.

காந்தியடிகள் தம் வாழ்நாளில் வாழ்ந்து காட்டிய உயர்ந்த நெறியையும், போற்றிய கொள்கைகளையும், காட்டிய உறுதியையும், செய்த தொண்டினையும் உலகம் பாராட்டுகின்றது. உலகத்தின் உத்தமராக அவரை மக்கள் போற்றுகின்றனர். அவருக்கு உண்மையான விழா எடுக்கவேண்டுமானால் அவருடைய வாழ்க்கையில் அவர் போற்றிய நெறிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அவர் விரும்பிய சமுதாயம் மலரப் பாடுபடுதல் வேண்டும். அவர் காட்டிய வழி நிற்றல் வேண்டும். இன்றைய காங்கிரஸ் கட்சியினர் அந்த நெறி நிற்கின்றனரா எனின் இல்லை என்பதனைப் பண்டிதநேருவிலிருந்து அனைவரும் அன்றாடம் சொல்லிவருகின்றனர்.

போட்டியிலும் பொறாமையிலும் பல காங்கிரஸ்காரர்களின் வாழ்நாள் கழிந்துகொண்டிருக்கின்றது.

கொல்லாமையை நோன்பாகக் கொண்டு போற்றிய அடிகளாரின் அடிச்சுவட்டில் நடப்பதாகச் சொல்லிக் கொள்வோரின் ஆட்சியில், நித்த நித்தம் துப்பாக்கியின் வெடியோசை கேட்கின்றது. தடிகள் அடக்குமுறைக்குப்பயன்படுவது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டிருக்கிறது.

ஏழையைப் போற்றவேண்டும் என்றுகூறியவரின் தொண்டர்களின் நிழலில் ஏழை அழும் குரல் மெல்லத் தேய்ந்து, அழவும் ஆற்றல் அற்றுவருகின்றது. இல்லாமையும் இன்னலும் நான் நீ எனப் போட்டியிட்டு எளியோரை வாட்டி வதைக்கின்றன. பணம் பேசும் சக்தி படைத்து வருகின்றது.

அன்பு நெறியில் அறத்தொண்டு ஆற்ற வேண்டியவர்கள் ஒருவரோடு ஒருவர் பகைகொண்டு பதவி மோகம்கொண்டு வம்பு வளர்த்துத் துன்புறுகின்றனர்.

இதனைக் கண்டு மனம் பொறாமல், நேருவும், தேபரும் காங்கிரஸ்கட்சி ஊழல் மலிந்ததாகிவிட்டது, தொண்டுள்ளம் துவண்டுவிட்டது, புதிய ஊக்கம் இடைத்தாக வேண்டும் என்று நாள்தோறும் 'இதோபதேசம்' செய்த வண்ணம் இருக்கின்றனர்.

மற்றத் தலைவர்களும் காங்கிரசில் படிந்திருக்கும் மாசுகளை எடுத்துக்காட்டி இடித்துரைக்கின்றனர்.

இந்த நிலைமையில் இந்தக்கிழமை காந்தி நினைவு விழாவும் வந்து சேர்ந்தது.

இரவெல்லாம் கனவு கண்டு கலங்கி இருந்தவன் பொழுது புலரும்போது எழுஞாயிற்றின் கதிர்கண்டு உண்மைநிலை உணருகின்றான். அதுபோல் பதவியும் பணமுமே குறியாகக் கொண்டிருந்த காங்கிரசார் காந்தியின் நினைவு என்ற எழுஞாயிறு கண்டதும் திடுக்கிட்டு விழித்து காந்தி அண்ணல், காந்தி அண்ணல் எனப் பலமுறை ஒலிக்கின்றனர்.

இதனால் மக்களை ஏமாற்றிவிடலாம் என மனப் பால்குடிக்கின்றனர். காந்தியாரின் பெயரைச்சொன்னவுடன் மயங்கி, மாசுகளை மறந்த காலம் இன்று இல்லை. ஆனால் அந்த நிலையை உணராததால் காங்கிரஸ் கட்சியினர் காலமெல்லாம் கயமைச் செயல்களில் மூழ்கியிருந்துவிட்டு, காலை புலர்ந்ததும் காந்தி வாழ்க எனக் கரைகின்றனர். இந்த ஆண்டு அதிலும் வேடிக்கை; பாதயாத்திரை என்று புதிய உத்தி ஒன்றனைக் கண்டுபிடித்தனர்.

காந்தியார் பேரும் புகழும் பெற்றதற்கான பல காரணங்களில் அவர் மேற்கொண்டிருந்த எளிய வாழ்க்கையும் ஏழ்மைத் தோற்றமும் ஒன்று. அதைக் கண்ட இன்றைய காங்கிரசார் தாங்களும் எளிய வாழ்க்கையை மேற்கொள்ளுவதாகக் காட்டிக் கொள்ளுவதாகச் சில நாட்கள் பாத யாத்திரை நடத்தினர்.

காந்தியார் உண்மையாகவே எளிமையாக இருந்தார்.

இவர்கள் எளிமையாக இருப்பதுபோல் காட்ட முனைகின்றனர்.

அந்தப் பாதயாத்திரையும் ஆளுக்குஆள் முறையால் மாறுபட்டு இருந்திடக் கண்டோம். உள் துறையமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தம்முடைய தொகுதியில் பல இடங்களில் பாத யாத்திரைப் பவனிவந்தார். வரும்போது அன்பர்கள், நண்பர்கள், வேண்டியவர்கள், இனி வேண்டியவர்களாக விரும்புகின்றவர்கள் இவர்கள் புடைசூழ, கோயிற்குடை வெயில் மறைக்க நடந்துவந்தார். குறிப்பிட்ட இடம் வந்ததும் சற்று நேரம் இளைப்பாறி, காரில் திரும்பச் சென்றார். வந்த சிலகல் தொலைவுக்குள் ஓரிடத்தில் செவ்விளநீரும், இன்னொரு இடத்தில் சிற்றுண்டியின் வகையில் சிலவும், இறுதியில் இன்னமுதுப் படையலும் முன்னமே காத்திருந்தன.

கிராம மக்கள் எதனையும் எடைபோட்டுப் பார்ப்பதில் வல்லவர்கள். இந்தக் கோலம் கண்ட அவர்கள் இத்தனை இடங்களில் இவ்வளவு உபசரிப்பு என்றால், நடந்தென்ன! படுத்து உருண்டே வரலாமே என எண்ணியதோடு, 'வரும்போது நடை! போகும்போது கார்!! இது வோ பாதயாத்திரை'? என்று கேலி பேசிய காட்சி அருங்காட்சியாகும்.

உண்மையிலேயே பாதயாத்திரையில் பக்தி சிரத்தையோடு ஈடுபடுகின்றார்கள் என்றே வைத்துக் கொண்டாலும், அதனால் மக்களுக்கு என்ன நன்மை என்பதுதான் தெரியவில்லை! வாழ்நாள் முழுவதும் பொய்யே பேசித் திரிபவன் ஒருநாள் நாடகத்தில் அரிச்சந்திரன் வேடம் புனைந்துவிட்டால், அதனால் அவன்பேசிய பொய்கள் காற்றிலே கரைந்துவிடாது. அதைப்போல் காந்தி நெறியைக் கைக்கொள்ளாமல், காற்றோடு காற்றாகக் கலக்கவிடுத்து 'ஒருநாள் கூத்துக்கு' உண்மையை விலைக்கு வாங்கிவிடலாம் என எண்ணுவார்களாயின், மக்களை அவர்கள் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் பொருள். அதனால்தான் இந்தக்கோலம் காட்டி ஏய்த்துவிடலாம் என எண்ணிவிட்டனர்.

ஆனால், அவர்கள் நோக்கம், நிலை இதுதான் என்பதனைக் காங்கிரஸ் கட்சியின்பால் அக்கறையும் அநுதாபமும் கொண்ட ஏடுகளே இடித்துக் காட்டியுள்ளன. கல்கியும் ஆனந்தவிகடனும் காந்தி வாரத்தில் காங்கிரசார் செய்யும் ஆர்ப்பாட்டங்களை எடுத்து விளக்கியுள்ளன. விழா அன்றைக்கு மட்டும் கூடிக் குலவிப் பின்னர் பிரிந்து வேறு வழி சென்று விடுவதனை அந்த ஏடுகள் எடுத்துக்காட்டியுள்ளன.

இந்த அளவோடு இருந்திருந்தாலும்கூட ஒரு நாளேனும் உத்தமர் பெயரை வாழ்த்தினரே எனக் காங்கிரஸ்காரர்களைப் போற்றிடலாம். ஆனால் அவர்களோ அந்த ஒரு நாளிலும் 'எங்கள் இயல்பு எங்கு செல்லும்' என்று கேட்பதுபோல், ஊருக்கு ஊர் கூட்டிய காந்தி விழாவில் கழகத்தினை ஏசுவதையும் தூற்றுவதையுமே தொழிலாகக் கொண்டிருந்தனர். இதனால் கழகம் அழிந்துவிடாது என்பது உண்மைதான். ஆனால் காந்தியின் பேரைச் சொல்லக்கூடிய இடத்திலும் கழகத்தைக் காய்வதை விடமுடியாதவர்களாக அவர்கள் ஆகிவிட்டிருக்கின்றனரே என்பதனை எண்ணும்போதுதான் அவர்கள்மேல் பரிதாபம்கூடப் பிறக்கின்றது.

விழா கொண்டாடுவது என்பது மிகவும் எளிது. ஆனால் அதிலேயிருந்து விளைவு ஏதாவது பெற்றாக வேண்டும். இல்லையெனின் விழாக்கொண்டாடியதை விடக் கொண்டாடாமலிருப்பதே மேல் எனலாம்.

காங்கிரசார் கொண்டாடிய விழாவின் விளைவு என்ன என்பதை ஒருமுறை எண்ணிப்பார்த்தாலே போதும், காந்தியின் பெயரைக்கொண்டு மக்களை ஏய்க்க நினைத்து, மாற்றாரைத் தூற்றி, பொய்பல உரைத்து ஏற்றம் பெற முனைகின்றனர் என்பது தெள்ளிதின் விளங்கும்.

அது இனி இயலாது. மக்கள் இன்று எதையும் எண்ணிப்பார்த்துத்தான் ஏற்கின்றனர், ஏமாறுதல் இல்லை என்பதைத் தெரிந்துகொள்ளட்டும் விழாக் கொண்டாடும் காங்கிரஸ்காரர்கள்.

# போலிவேடம்

கடந்த கிழமை, தமிழகத்தில் பாரதியார் நினைவுநாள்—பாரதி விழா எனும் பெயரால் கொண்டாடப்பட்டது. இவ்விழா எட்டயபுரத்தில்மிகமிகச்சிறப்பாகக்கொண்டாடப்பட்டது—அவர் பிறந்த ஊர் என்பதால். இங்கு கொண்டாடப்பட்ட இவ்விழாவைப்பற்றிக் கடந்த சில தினங்களாக எழுதாத தினத்தாட்கள் இல்லை. அது போலவே இதைப்பற்றிப் பேசாத நாட்களும் இல்லை.

இவ்வாண்டு, இவ்விழாவை திரு. சிவாஜி கணேசன் அவர்கள், ஏனைய நடிகமணிகளின் உதவியால் கொண்டாடினர். ஆகவே இவ்விழா நடிகர் குழாத்தால்—கொண்டாடப்பட்ட விழாவாயிற்று. அவர்களது அழைப்பிற்கிணங்கித் திரைவானில் மின்னும்—திரைப்பட எழுத்தாளர்கள், இசை இயக்குநர்கள்—இசைவல்லுநர்கள் முதலியோரும் இன்னும் திரைப்படத் தொழில் அதிபர் சிலரும் பங்கேற்றனர்.

தவிர, தமிழகத்துத் தமிழறிஞர் சிலரும், மந்திரிமார்கள் சிலரும், அரசியல் தலைவர்களில்ஒருசிலரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்—அவ்விழாவை.

விழாவில் கலந்துகொண்ட மந்திரிகள் மூவரும் முக்கியமானவர்கள். அவர்கள் மந்திரி சபையின் முதல்வர்கள் போன்றவர்கள். தங்களாலே தான் "எதிர்க்கட்சிகள் எல்லாம அடங்குகின்றன" என எண்ணிக்கொண்டு உள்ளவர்கள். ஆம் முதன்மந்திரி திரு. காமராஜ், நிதி, மதி ஆகியவற்றின் மந்திரி திரு. சுப்பிரமணியம், காவல் மந்திரி கனம் பக்தவத்சலம் ஆகியோராவர்.

இம்மந்திரிகள் ஒருபோது "தி. மு. க.வினர் எல்லாம் கூத்தாடிகள். அவர்களுக்குச் சினிமா, நாடகக் கதை — வசனம்தான் எழுத முடியும். முகத்தில் கலர்ப் பொடி பூசிக்கொண்டு நடிக்க — அல்ல, கூத்தாடத்தான்—தெரியும்?" என ஏளனம் பேசினர்.

ஆனால் இன்று, தி.மு.க.வினர் இல்லை. வேறு சில கூத்தாடிகளுடன்—(ஆம் மந்திரிகளின் அகராதிப்படி) — சேர்ந்துகொண்டு அவர்களால் கொண்டாடப்பட்ட பாரதி விழாவில் கலந்து சிறப்பித்தார்கள்—மந்திரிமார்கள். பெருமைப்படுகின்றோம். பாராட்டுகின்றோம், மகிழுகின்றோம் — அவர்கள் செயல் கண்டு.

இன்று, எட்டயபுரத்தில் பாரதியின புகழ் பேசிய மந்திரிகள்

**தென்னவன்**

உண்மையாகவே பாரதியின் புகழைப் பேசினரா, அன்றி மக்களை ஏமாற்ற — கண்துடைப்புக்காக, அவர் புகழைப பேசினரா என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்.

முன்னர் ஒருதடவை சென்னை சட்டமன்றத்தில், "சென்னைக்குத் தமிழ்நாடெனப் பெயர் சூட்ட வேண்டும்" என ஒரு தீர்மானம் எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப் பட்டது. அதை எதிர்த்த நிதி மந்திரி அவர்கள், அப்போது, "நீங்கள் சொல்வதால் (எதிர்க் கட்சிகள்) தமிழகம் எனப் பெயர் சூட்டமுடியாது" என்றார்.

திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒரு தடவை சென்னையில் பேசிய பொழுது, "நம் மாகாணத்தை சென்னை (Madras) என்றழைத்தால்தான் உலகிற்குத தெரியுமே யன்றி, தமிழ்நாடென அழைத்தால் யாருக்கும் தெரியாது! ஆகவே தமிழ்நாடெனப் பெயர் சூட்ட முடியாது"—என்றார்.

கனம் காமராஜ் அவர்கள் தனக்கு எந்தப்பற்றும் கிடையாது எனக் கூறுபவர். ஆகவே அவர்களிடம் மொழிப்பற்றோ—நாட்டுப்பற்றோ நாம் எதிர்பார்க்க முடியாதது. அவர்கட்கெல்லாம் மேலிடம், தங்களைப் போற்றவேண்டும் என்ற ஒரே பற்றுத்தான் உண்டு. ஆகையால், அவர்கள் பெயர் மாற்றத்தால் என்ன ஏற்படப் போகின்றது என இருப்பவர்கள்.

இவர்கள் தான், தாய்நாட்டுப் பற்று, தாய்மொழிப்பற்று, தமிழினப் பற்று அனைத்தும் ஒருங்கே அமைந்த பாரதியின் புகழைப் பேசுகின்றனர்-தங்களுக்கு எந்தப் பற்றும் இல்லாமல்.

பாரதியார், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத் தொழுதுபடி பாப்பா" எனத் தமிழ்மொழியின் சிறப்பையும்,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"—
"வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"—
"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா—

எனத் தமிழ்நாட்டை — அதன் சிறப்பைப் பற்றியும்,

"விதியே! விதியே! தமிழ்ச் சாதியை
என் செயக் கருதி யிருக்கின்றாயடா"

எனத் தமிழினத்தைப் பற்றியும், மிக அருமையாக அவாவோடும் — உரிமையோடும் பாடியிருக்கின்றார்.

பாரதியார், இன்று சென்னைக்குத் தமிழகமெனப பெயர் சூட்ட வேண்டுமெனக் கோரும் எதிர்கட்சிகளெல்லாம் தோன்றுதற்கு முன்னரே,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—
இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"

எனப் பாடியுள்ளார்.

யாருக்கு எதில் பற்று இருக்குமோ அதைப்பற்றிப் பேசுவதிலே அவருக்கு விழைவும் இருக்கும். அதுபோலத்தான் பாரதியாருக்குத் தமிழ்நாட்டின்மீது பற்றும் பாசமும் இருந்திருக்கின்றது. ஆகவே அவர், "சென்னை நாடெனும் போதினிலே"—எனப் பாடாது, "செந்தமிழ் நாடெனும் போதினிலே" எனப்பாடிச் சென்றார். அவர் வாழ்ந்த காலம் சென்னை எனும் பெயரைப் போற்றிய வெள்ளையன் வாழ்ந்த காலம். அப்போதும் கூட அவர் தமிழ் நாடெனத்தான் பாடினார். தன் நாட்டுப் பற்றை — மொழிப் பற்றைக் காட்டினார்.

அத்தகைய இன்பத் தமிழ்நாடு தான் — பாரதியின் காதினிலே தேனைச் சேர்த்த செந்தமிழ் நாடு தான் — இன்று அவர்தம் புகழ் பாடும், இத்தமிழ்ப் புலிகளின் ஆட்சியில் எஞ்சிய சென்னை எனப் பெயர் பெற்று அனாதை போல் காட்சி அளிக்கின்றது. ஆம் சாலையின் ஓரத்திலே வேலையற்றுத்திரியும் அனாதையை யார் என்ன பெயர் கொண்டழைப்பர்? அந்நிலைதானே இன்று தமிழகத்திற்கும்!

இந்தியத் துணைக்கண்டத்தில் ஒவ்வொரு மாநிலமும் மொழிவழி வந்த பெயரைப் பெற்று, வங்காளம், பஞ்சாப், ஆந்திரம் கேரளம் என—அருமையாய்க் காட்சி தருகின்றது. ஆனால் நமதருமைத் தமிழகம் — பன்னூறாண்டுகட்கு முன்னரே தனக்கென ஒரு பெரிய ஒப்பற்ற மொழியினைத் தமிழெனும் பெயரால் பெற்றிருந்தும், அதன் வழி தன்னை அழைக்க நாதியற்றிருக்கின்றது.

முன்னர் சென்னையோடிருந்த தெலுங்குப் பகுதி, சென்னையிலிருந்து பிரிந்ததால் ஆந்திரமாயிற்று. முன்னர் சென்னையுடன் இருந்த கன்னடம் பேசும் பகுதி —சென்னையிலிருந்து பிரிந்ததால் கன்னடமாயிற்று. அதுபோலத்தான் மலையாளம் பேசிய பகுதி இன்று கேரளமெனும் பெயரைப் பெற்றுத் தலை நிமிர்ந்து நிற்கின்றது. அவைகளுடன் இருந்த தமிழ்ப் பேசும் பகுதி அவைகள் எல்லாம் பிரிந்துவிட்ட இன்று— தமிழகமெனும் பெயரை — பாரதியார் விரும்பி அழைத்த—அந்தப் பெயரைப் பெறவில்லை. ஏன் பெறவில்லை?

இங்குள்ள மந்திரிகள் தமிழ் பேசவில்லையா? அல்லது தமிழகமென அழைக்க மொழி வரலாறு தெரியாதவர்களா? இல்லவே இல்லை.

தமிழ் முன்னிலும் சிறப்பாகப் பேசப்படுகின்றது —அவர்களால். தமிழின் தொன்மையையும் முன்னரே அறிவர். பின் ஏன் இந்நிலை? அவர்கள் அரசியல் உரிமையற்ற அனாதைகளாக இருக்கின்றார்கள். தாங்கள் எண்ணியபடி எதையும் செய்ய இயலாதவர்களாய், "கடிவாளம் மாட்டப்பட்ட குதிரை போல்" இருக்கின்றனர். ஆகவே தமிழகமும் அனாதைபோல் காட்சி தருகின்றது.

"சென்னை என்றால் உலகினுக்குத் தெரியும்--தமிழ்நாடென்றால் யாரும் அறியார்" என்கின்றனர் — பாரதியின் புகழைப் பார் முழுவதும் பேசும் பக்தவத்சலனார் போன்றார்.

ஆனால் அவர்களை ஒன்று கேட்போம். முன்னைய இந்தியா, "பாரதம்" ஆயிற்றே! யாரும் அறியாமலா இருக்கின்றனர்? வெளி நாட்டவரெல்லாம் நன்கு அறிந்துகொண்டு கடனையும் அளிக்கின்றனரே. இன்னொன்று இந்தியப் பாராளும் மன்றம் "லோக்சபா" ஆயிற்றே — அதை எத்தனை பேர் அறியாதிருக்கின்றனர்?

ஆகவே இன்று பாரதி விழாவில் பங்குகொண்டு, பாரதியின் புகழை உண்மையாகவே பேசுவதாக இருந்தால்—நம் மந்திரிமார்கள் உடனே சென்னையைத் தமிழ் நாடென அழைக்க வேண்டும். அவ்வாறு செய்யாது அரசியல் அனாதைகளாக இருந்துகொண்டு கண்துடைப்பிற்காக அவர்தம் புகழைப் பேசினால் பாரதியின் விருப்பம் உருப்பெறாது. தமிழ் மக்களும் மந்திரிகளின போலி வேடத்தைக் கண்டு மயங்கிவிட மாட்டார்கள்.

★

# நிதி தாரீர்!

மறைந்த வீரர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களுடைய அருந்தொண்டைப் போற்றும் அறிகுறியாக, அவரது குடும்பத்தாருக்கு உதவிசெய்யும் வகையில், திரு. பி. டி. இராசன் எம். எல். சி. அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. சி. என். ஏ., வி. வி. இராமசாமி எம். எல். சி. அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் எம். இரத்தினசாமி, டாக்டர் மதுரம் எம்.எல்.ஏ. ஆகியோர் துணைத் தலைவர்களாகவும்; செயலாளராக க. அன்பழகன் எம். எல். ஏ-யும்; செயற் குழுவினராக இரா. நெடுஞ்செழியன், வாணியம்பாடி வே. ச. விசுவநாதன், வேலூர் கு. மு. அண்ணல்தங்கோ, வழக்கறிஞர் கோகுலகிருஷ்ணன், சேலம் க. இராசாராம் ஆகியோரும் உள்ள இந்நிதிக் குழுவின் பொருளாளர், சென்னை 7. வேளாளர் தெரு 39-ம் இல்லத்திலுள்ள என். ஆர். சடகோபன் அவர்களாகும்.

மறைந்த 'அண்ணனின்' குணங்களைக் குறித்தும், திராவிட சமுகத்துக்கு அவராற்றிய தொண்டு பற்றியும், நாம் எடுத்துரைக்க வேண்டியதில்லை.

அத்தகைய ஒருவரைப் பெற்றிருந்து இன்று அவரில்லாததால் அவதியடையும் நிலையிலிருக்கிறது, அவரது குடும்பம். தமிழகம், தன் நன்றியைக் காட்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

பலதுளி பெருவெள்ளமாகும்! இயன்றதை, நிதிக் குழுவின் பொருளாளருக்கு அனுப்பியுதவுங்கள் என்று 'திராவிடநாடு' சார்பில், கேட்டுக் கொள்ளுகிறோம்.

# அந்தக் கடிதம்!

ச. இராமலிங்கம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

அந்தத் தினமும் வந்தது. தாயிடம் தைரியமாக "அம்மா உன் மருமகளை அழைத்துவரப்போகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

ஆனாலும் என் உள்ளத்தில் ஏதோ அச்சம். நான் அவளை என்னுடன் புறப்படு என்றால் எப்படி நம்புவாள்—அவள் எழுதிய கடிதம் ஒன்றுதான் என்னிடமிருந்தது. வேறு ஒரு ஆதாரமும் இல்லை; அத்தாட்சியும் இல்லை, நான் அவள் மாற்றாந்தாய் அனுப்பிய ஆள் என்பதற்கு.

இருப்பினும் சிறிது தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, போய்ப் பார்த்து, அவள் நிலைமையை அறிவது—அவளே புறப்பட்டு வருவதாக இருந்தால் அழைத்துக்கொண்டு வந்துவிடுவது--இல்லையென்றால் அங்கேயே விட்டு விட்டு, ஏதாவது அறிவுரை சொல்லிவிட்டு வந்துவிடுவது என்று திட்டமிட்டேன்.

அதற்கு ஏற்றாற்போல் தயார் செய்துகொண்டு அந்த வீட்டிற்கும் சென்றேன்! வெளியில் ஒரு சிறு பையன் விளையாடிக் கொண்டிருந்தான். அவனைக் கூப்பிட்டு "தம்பி தங்கம் இங்கேதானே இருக்கிறாள்" என்று கேட்டேன். "அக்கா யாரோ கூப்பிடறா" என்று அந்தப் பையன் உள்ளே கத்திக்கொண்டுபோக, ஒரு பெண் அல்ல — அல்ல — ஒரு அழகுரு ஓடி வந்தாள். நான், அவள் வீட்டு குட்டி எசமானி என்று நினைத்து மெதுவாக தலையைச் சொரிந்து கொண்டே "நான் வந்து...சென்னையிலிருந்து வர்றேன். தங்கம் இல்லே...அவள் சின்னம்மா என்னை அனுப்பினாங்க" என்று அடக்கம் ஒடுக்கமாகப் பதில் சொன்னேன்!

அவள் சிரித்துக்கொண்டே "வாங்க அண்ணா நான்தான் தங்கம்" என்றாள். தங்கம் என்னை "அண்ணா" என்று அழைத்ததும் என் மேல் இடிவிழுந்ததுபோல் இருந்தது — "அண்ணா" என்று அவள் கூப்பிட்டதும் அவளைப் பின்தொடர எனக்கே வெட்கமாக இருந்தது. நான் எழுதிய கடிதத்தைக்கண்டு, சிற்றன்னை அனுப்பிய ஒருவன் ஆசை அண்ணனாக வந்து அழைத்துப் போகிறான் என்றல்லவா நினைத்துக்கொண்டிருக்கிறாள் அந்தப் பேதைப் பெண்!

வெட்கத்தோடும், உள்ளத்தில் வேதனையோடும் அவளைப் பின்தொடர்ந்தேன். அவளுக்கென்றே ஒதுக்கப்பட்ட ஒரு அறையில் என்னை உட்காரவைத்தாள். நானும் அமர்ந்தேன். அவள் மெதுவாகக் கதவை மூடினாள். எனக்கே சபலம் ஏற்பட்டுவிட்டது. நெருங்கி "அண்ணா! எனக்கு இங்கு இருக்கவே பயமாக இருக்கிறது! சின்னம்மா இவ்வளவு சீக்கிரம் ஆள் அனுப்புவார்கள் என்று நினைக்கவில்லை" என்று எனது காதின் அருகில் சொன்னாள்.

அவள் விட்ட மூச்சு என் கழுத்தின் மேல் பட்டதும் என் உள்ளத்திற்கு கிளர்ச்சி யூட்டுவதுபோல் இருந்தது—கதவு சாத்தியிருக்கும் அறை—காளைப் பருவத்தில் ஒரு வாலிபன் — பக்கத்தில், பருவப் பெண் — உணர்ச்சி மேலிடுவது போல் இருந்தது. எனக்கே என் மனச்சான்றை நம்பமுடியவில்லை. என் கைகள்... எனக்கே துரோகம் செய்துவிடுமோ என்றபயம்!! இந்த நிலையில் நான் ஒரு காமுகனாகிவிட்டேன் என்றே நினைத்த அந்த வேளையில், திடீரெனக் கதவு திறந்தது. அந்தச் சிறிய பையன் ஓடி வந்தான்.

அந்தக் கிள்ளையைப் பார்த்ததும் இவள் துள்ளி ஓடி அவனைத் தூக்கிவந்தாள் "அண்ணா! இவனால்தான் நான் இங்கு இருக்கிறேன்! இப்போது நினைத்தால் கூட எப்படி இவனைப் பிரிந்து இருப்பதுஎன்றுதோன்றுகிறது" என்றாள்.

"ஏன் அவனையும் அழைத்துக் கொண்டு வரலாமே!" என்றேன்.

"வர்றியா கண்ணு என்னோட— வந்தா மிட்டாய் எல்லாம் வாங்கித் தருவேன்" என்றாள்.

"நான் வரமாட்டேன் போ! நீ கூடப் போகக்கூடாது" என்றான்.

"சரி ஏது உன்னைவிடமாட்டான் போலிருக்கே! சின்னவனே இப்படி உரிமை கொண்டாடும்போது பெரியவன் ஏன் உரிமை கொண்டாட மாட்டான்."

"போங்க அண்ணா உங்க கேலி! இவன் பெரிய அண்ணாவைப் பார்த்தால்தான் ஒரேபயமா இருக்குது! இப்போ தீபாவளிக்கு வரப் போறானும்! அவன் கையிலிருந்து எப்படியோ தப்பித்துக்கொண்டு வந்தேன் இதுவரை. அவனுக்குப் பயந்துகொண்டே அவன் தங்கையோடவே சுற்றிக்கொண்டிருந்தேன். அவளுக்குக்கூட ஆவணியிலே கலியாணம் ஆகிவிட்டது. இந்த லீவுக்கு வந்தா..."

"அதற்குள்தான் நான் வந்து விட்டேனே! ஏன் தங்கம் நீ இங்கேயே எப்படியாவது சமாளித்துக் கொண்டிருக்க முடியாதா!

"அண்ணா! நான் கஷ்டப்படுவதற்குப் பயப்படவில்லை; ஆனால்

நான் சமுகத்தில் வாழமுடியாதவளாக வாழக்கூடாது என்பது தான். எனக்கு அங்கு போனாலும் இதைவிடக் கஷ்டம்தான்; தெரியும். இருப்பினும் என் மானத்தை விலேபேசும்நிர்பபந்தம்ஏற்படாது''

''எப்படித் தங்கம் சொல்லமுடியும்! அங்கு யாராவது ஆசை காட்டி மயக்கிவிட்டால்!''

''யாராவது இருக்கலாம்! ஆனால் அண்ணு உன்னைப் போன்றவர்கள் எனக்கு உற்ற துணையாக இருக்கும்போது, எனக்கு ஒன்றும் ஏற்படாது என்று நம்புகிறேன்; இல்லையா அண்ணு!'' என்றதும் நானே என்னை நொந்துகொண்டேன்! வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் இந்தப் பெண்ணின் மேல் வீணுக ஆசைப்பட்டு விட்டோமே. தங்கம் எனக்குத் தகுந்த அணிகலன் ஆவாள் என்று நினைத்தஎனக்குப்பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டது. இருப்பினும் ஒருபுறம் அவள் அழகையும், உடல் வனப்பையும் கண்ட என் மனம் ஏனே விட்டுக்கொடுக்கச்சம்மதிக்கவில்லே. எப்படியாவது மெதுவாக அவள் உள்ளத்தை மாற்றிவிடலாம். ஊருக்கு அழைத்துச்சென்று உண்மையைக் கூறிவிட்டால் கட்டாயம் மாறிவிடுவாள் என்ற எண்ணத்துடன், ''தங்கம் எப்போது புறப்படுவது? நீ உன் எசமானரிடமெல்லாம் சொல்லியாகிவிட்டதா'' என்றேன்.

''நான் நீங்கள் எழுதியிருந்த கடிதத்தையே காண்பித்தேன் அண்ணு! அவர்கள், ''சரி போய் விட்டு வா'' என்று காலேயிலேயே சொல்லிவிட்டார்கள். நாம் எப்போது வேண்டுமென்ருலும் புறப்படலாம். சாயங்காலமாகப் புறப்படலாமே! நீங்களும் காப்பி சாப்பிட்டுவிட்டு, வரதராசப் பெருமாள் கோவிலுக்குப் போய்ப் பார்த்து விட்டு வாருங்கள். இங்கு வருபவர்கள் யாரும் பார்க்காமல் போவதில்லே'' என்ருள்.

''சரி'' என்று சொன்னதும் அவள்போய் காபி கொண்டுவந்து கொடுத்தாள்.

*

காபியைக் குடித்துவிட்டு நான் வரதராசப் பெருமாள் கோவிலுக்குப் புறப்பட்டேன். கூட்டத்திற்கு குறைவில்லே! எனக்குக் கோவில் என்ருலே பிடிக்காது; இருப்பினும் ஏதாவது நல்ல சிற்பங்களேப் பார்த்துவிட்டு வரலாம் என்று தான் உள்ளே நுழைந்தேன்.

ஏதோ மண்டபமாம்! ஏறக்குறைய நூறு தூண்கள் இருக்கும். அதில் செதுக்கி இருக்கும் சிலேகள் அதைச் செதுக்கிய சிற்பியின் கைத்திறனேயும் உள்ளக் கிளர்ச்சியையும் காட்டுவதுபோல் இருந்தது. விதவிதமான மங்கையர்கள்—சிற்பிகள் நிர்வாணத்தை ரசிப்பவர்கள்போல் இருக்கிறது! எந்த இடத்தில் உள்ளத்தின் உணர்ச்சிகளே அடக்கி ஆண்டவலேநாட வேண்டும் என்று சொல்கிருர்களோ, அங்கே தான் காமத்தை மூட்டும் கற்சிலேகள். இதைவிடக் கோவில் வாயிலின் கற் தூண்களில் காணப்பட்ட அந்தச் சிற்பங்களே ஏன் இன்னும் அழிக்காமல் வைத்திருக்கிருர்கள்! ஆத்திகத்திற்கு ஆதரவு தரும் தோழர்களுக்கு இது கண்ணில் படவில்லேபோலும்! பட்டும் அதை ரசிப்பதற்காகவே விட்டு வைத்திருக்கிருர்கள்போலும்!!

இதையெல்லாம் நினைத்த என் உள்ளம் ஏனே மேலும் உள்ளே செல்ல மறுத்துவிட்டது; வீட்டிற்குத் திரும்பினேன்.

''என்ன அண்ணு இவ்வளவு சீக்கிரம் சாமிகும்பிட்டுவிட்டுவந்து விட்டீர்களா'' என்ருள் தங்கம்.

''இல்லே தங்கம், வழியில் ஒரு நண்பர் கிடைத்தார், அவருடன் பேசிக்கொண்டே வந்துவிட்டேன்'' என்று ஒரு பொய் பேசினேன்'' அவளும் நம்பிவிட்டாள்.

அன்றுமாலே பஸ்ஸில் புறப்பட்டோம். நான் தனியாகத்தான் உட்காரலாம் என்று நினைத்தேன். பஸ்ஸில் இருந்த சூழ்நிலே இடம் தரவில்லே; நான் அவள் பக்கத்தில் உட்காரவேண்டியிருந்தது.

பஸ் திரும்பும்போதும், திடீரென்று நிற்கும் போதும். அவள் உடல் என்மேல்பட்டது. எனக்கு உடலெல்லாம் புல்லரித்தது. ஆனால் அவள் இந்த உணர்ச்சிக்கெல்லாம் வசப்பட்டதாகத் தெரியவில்லே! அவள் தான் என்னை அண்ணு என்று அழைத்துவிட்டாளே!

வழியெல்லாம் என் கடிதம் எழுதும் திறனே நானே மெச்சிக் கொண்டேன்! எவ்வளவு பக்குவமாக எழுதியிருந்தால் வீட்டு எசமானர் முதல் ஏமாந்திருப்பார்கள்!!

சென்னே வந்ததும், பஸ்ஸை விட்டிறங்கி ஒரு ஆட்டோ ரிக்ஷா பேசிப் புறப்பட்டோம்!

''எங்கே அண்ணு நேரே சின்னம்மா வீட்டிற்குத்தானே''

''இல்லே தங்கம் முதலில் என் வீட்டிற்குப் போய்விட்டுப் பிறகு அங்கிருந்து போய்விடலாம். முதலில் என் அம்மா உன்னேப்பார்க்க ஆசையோடு இருக்கிருள்''

''அண்ணு! நீங்கள் செய்யும் இந்த உதவிக்கு நான் எப்படி நன்றி செலுத்துவது என்று தெரியவில்லே'' என்றுகண்கலங்கச் சொன்னுள். என் கண்களும் சிறிது கலங்கத்தான் செய்தது.

வீடு வந்ததும், பெட்டியை எடுத்துக்கொண்டு தங்கம் இறங்கினுள். நான் ஆட்டோ ரிக்ஷாக் காரனுக்கு காசைக் கொடுத்து விட்டு ''அம்மா அம்மா நான் அழைத்துக்கொண்டு வந்துட்டேன்'' என்றேன்.

''அங்கேயே இருடா ஆலம் கொண்டு வருகிறேன்'' என்று அம்மாஉள்ளிருந்து சொன்னதும்,

''என்ன அண்ணு இது? விளையாட்டாக இருக்குது'' என்ருள் தங்கம்.

''பாரேன் இன்னும் வேடிக்கையை, போகப் போகத்தான் தெரியும்'' என்று நான் சொல்வதற்குள், தாய் ஆலம் கரைத்துக்கொண்டு அதில் கற்பூரம் ஏற்றி வைத்துக்கொண்டு,

''நில்லும்மா கண்ணு, பேய் பக்கத்திலே சரியா நில்லேண்டா'' என்று ஆலம் சுற்ற ஆரம்பித்தாள். ஆலம் அவள் முகத்தருகில் சுற்ற ஆரம்பித்ததும், என் தாய் அவளேயே உற்றுக் கவனித்தாள்.

சரி மருமகள் அழகை பார்க்கிருள்போலிருக்கிறது என்று நான் சும்மா இருந்துவிட்டேன். திடீரென்று தட்டை அப்படியே வைத்துவிட்டுத்தங்கத்தின்இடது முழங்கையின் பின்புறம் பார்த்தாள். அங்கு ஒரு பெரிய மச்சம் இருந்தது. உடனே ''ஐயோ என் மகளே! தங்கம்'' என்று அப்படியே சேர்த்துக் கட்டிக்கொண்டாள்.

(12-ம் பக்கம் பார்க்க)

# விடுதலை வீரன் ரிசால்

மு. கோதண்டன்

பிலிப்பைன் நாடு இயற்கை வளம் நிறைந்த நாடு, உழைக்கும் நல்வீரர்கள் உலவும் நாடு. அன்று வெள்ளையர் தம் அடிமைக்காடாய் இருப்பதை நினைக்கவே முடியவில்லை அவனால்! சோகமும் கோபமும் பீறிட்டெழ 'அம்மா' வென்றோடினான் ரிசால்! 'என்ன மகனே!' என்று அன்போடு கேட்டாள் அவன் தாய். 'நாம் வாழும் இந்தப் பிலிப்பைன் நாடு, நமது நாடுதானே அம்மா' என்றான். 'ஆமாண்டா, கண்ணே!' என்றாள் அன்னை. 'பின் ஏனம்மா நம் நாட்டை அந்நியரான வெள்ளையர் ஆள்கிறார்கள்' என்று ஆத்திரத்தோடு கேட்டான் ரிசால். 'நம் நாட்டைப் போரிலே வென்றுவிட்டார்களாம் ஒரு காலத்தில் வெள்ளையர்கள். இன்று நம்நாடு சுதந்திர நாடல்ல கண்ணே! அடிமை நாடு! அடிமை நாடு!!' என்று ஆவேசமாய்க் கூறினாள் அவள். 'அம்மா! அடிமை வாழ்வை அகற்றுவேன், அந்நியரை விரட்டுவேன்!' என்று வீர முழக்கமிட்டான் ரிசால். 'கண்ணே நீ இன்று சிறியவன்! நாளை பெரியவனானால் செய்வாய்!' என்று அன்போடு மார்பில் அணைத்துக் கொண்டாள் தன் அன்பு மகனை!

1861-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் தேதி ஓர் புகழ்பெற்ற வீரக் குடும்பத்தில் பிறந்தான் ஜோசி ரிசால்! அவன் தாய் ஒரு சிறந்த கவியரசி. நாட்டு உணர்ச்சியைத் தூண்டும் உயர்ந்த கவிதைகளை எழுதும் ஆற்றல் பெற்றவள். அவன் தந்தை ஓர் புகழ்பெற்ற அறிஞன்.

ரிசால் இயற்கையில் எதையும் ஆழ்ந்து நோக்கும் சிந்தனைத் தெளிவும், எதையும் கூர்ந்து கவனிக்கும் உயர்ந்த அறிவும், நினைத்ததைச் செய்து முடிக்கும் பேராற்றலும் உடையவன். அப்பொழுது பிலிப்பைன் ஸ்பானியர் என்னும் வெள்ளையரது அடிமை நாடாய் இருந்தது. தன் நாட்டின் பொன்னும் பொருளும் அந்நியரால் சுரண்டப்படுவதையும், அதனால் தன் நாட்டவர் வறுமையிலிருந்து மீளாமல் செத்துக்கொண்டிருப்பதையும், ஸ்பானிய அதிகாரிகள் செய்யும் கொடுமையையும் எண்ணி எண்ணி மனம் புழுங்கிக்கொண்டிருந்தான். அப்போது ரிசாலுக்கு பதினொரு வயது. ஆயினும் தன் தாய் எழுதிக்கொடுக்கும் தேசிய எழுச்சிமிக்க பாடல்களை, இனிமையாகப் பாடும் ஆற்றல் பெற்றிருந்தான். தானே வீரமிக்க கவிதைகளை இயற்றும் அறிவும் பெற்றிருந்தான். தான் எழுதிய கவிதைகளைத் தன் நண்பர்களிடம் இனிய இசையோடு உணர்ச்சி பொங்க அழகாகப் பாடிக் காட்டுவான்!

ஸ்பானிய ஆட்சியைக் கவிழ்க்க பிலிப்பைன் மக்களைத் தூண்டியதாகக் குற்றம் சுமத்தி ரிசாலின் தந்தையைச் சிறையில் அடைத்தனர் ஸ்பானியர். நாட்டுணர்ச்சியைத் தூண்டும் புரட்சிக் கவிதைகளை இயற்றியதாகக்கூறி அவனது தாயையும் சிறையில் பூட்டினர். ரிசால் தணலில் விழுந்த புழுவெனத் துடித்தான்! அலையிலகப்பட்ட துரும்பெனத் தவித்தான்! செய்வதொன்றும் புரியாது விழித்தான். இது போன்ற அதிர்ச்சிகளை அவன் இதுவரையில் தாங்கியதில்லை. அந்நியரின் செயல் கண்டு ஆத்திரம் எய்தியது அவனுள்ளம். சூதுக்காரர்களைச் சும்மாவிடுவதா என்று துடிதுடித்தான். தன்னந்தனியாகத் தான் ஒருவன் மட்டும் எதிர்த்தால் நாட்டிற்கு நம்மால் நன்மை ஏதாகிலும் பயக்குமா என்று யோசித்தான். 'இன்றைய நிலையில் உருவான பயன் ஏதும் ஏற்படாது. நாட்டுணர்ச்சியைத் தூண்ட வேண்டும்; நானிலம் புகழும் நல்லறிவு பெறவேண்டும். பரங்கியரே அதிசயிக்கும்படி படித்துப் பட்டம் பெறவேண்டும். பிலிப்பைன் நாட்டைப்பற்றிப் பாரறியச் செய்யவேண்டும்' என்று எண்ணினான். எண்ணியபடி செயல்படவும் தொடங்கினான்!

ஆண்டுகள் சில கழிந்தன. ரிசால் மணிலாக் கல்லூரியில் ஊக்கமுடன் படித்துக்கொண்டிருந்தான்! அப்போது சிறையிலிருந்து விடுதலை அடைந்தாள் அவன் அன்னை. தன் மகனின் அறிவு வளர்ச்சியும், நாட்டு உணர்ச்சியும் கண்டு அவனது தாய் புத்துணர்ச்சி பெற்றவளாய் புளகாங்கிதமடைந்து அவனைக் கட்டி அணைத்துக்கொண்டாள்.

"மகனே! நீ நன்கு படிப்பாய் நாடு விடுதலைபெற உழைப்பாய் என்று ஒவ்வொரு வினாடியும் சிறையிலிருக்கும்போது நினைத்துக்கொண்டிருந்தேன். அந்

நினைப்பு வீண் போகவில்லை கண்ணே, நீ முதலில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும்! பட்டம் பெறவேண்டும்; பார் புகழவேண்டும்! உன்னால் இந்நாடு விடுதலை அடைய வேண்டும்; அன்னையின் கை விலங்கு அறுபடவேண்டும்!"

"அன்னையே! அன்னை நாடு அடிமை நாடு என்பதை ஒவ்வொரு நிமிடமும் நினைக்காமலிருப்பதில்லை. இந்நாட்டவர் வாழ இயற்கை வளமெல்லாம் தந்தாள் என் அன்னை. இந்நாடு உரிமையற்றிருக்க நாங்களென்ன உலுத்தர்களா? உதவாக்கரைகளா? சொல்லுங்கள் அன்னையே!"

"மகனே! நீ பேசும் பொற்சித்திரமாக இருக்கும்போது உனக்குப் பாலை மட்டுமா ஊட்டினேன்? பாலோடு நாட்டுப் பற்றையும் கலந்தல்லவா ஊட்டினேன்? பிலிப்பைன் நாட்டின் விதியை நிர்ணயிக்க வேண்டியவனல்லவா நீ? நன்கு படி கண்ணே!" என்று ஆசிகூறி உரையாடலுக்கு முற்றுப் புள்ளி இட்டது அவனது அன்னையின் அன்புள்ளம்.

காலச் சக்கரம் சுழல, கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு, ஆசிரியர்களின் நன்மதிப்பையும் பெற்றுக்கொண்டு, மாட்ரிட் பல்கலைக் கழகத்திற்குச் சென்று பொறியியல் துறையில் முதல்வனாகத் தேர்வுபெற்று, பிரெஞ்சு நாட்டிற்குச் சென்று பிரெஞ்சு மொழியும், மருத்துவமும், ஜெர்மனிக்குச் சென்று ஜெர்மனியும், இரசாயனக் கலையும், இயந்திரக் கலையும் கற்றுக்கொண்டான். இவ்விதம் அவன் பல பல்கலைக் கழகத்திற்குச் சென்று மருத்துவத் துறை, சட்டத் துறை, கலைத் துறை ஆகிய பல துறைகளில் சிறந்து விளங்கி உயர்ந்த அறிவைப் பெற்றான்.

இந்த நேரத்தில்தான் ரிசால், "பிலிப்பைன்" என்றொரு ஆராய்ச்சி மிகுந்த நூலை எழுதினான். அந் நூலில் பிலிப்பைன் நாட்டின் இயற்கை வளத்தைப் பற்றியும், அந்நாட்டின் சிறந்த துறைமுகங்களைப் பற்றியும், விரிவாகவும், விளக்கமாகவும் எழுதியிருந்தான். அதில் பிலிப்பைனரின் முன்னோர்கள் ஒரு காலத்தில் எப்படி வீரமும், தீரமும், சுதந்திரமும் பெற்றுச் சிறந்து வாழ்ந்தனர்; இன்று அவர்களின் சந்ததியினர் அந்நியர் ஆட்சியில் சிக்கி எப்படி அல்லற்படுகின்றனர். என்பதைப் பற்றியும் எழுதியிருந்தான். "பிலிப்பைனரின் முன்னோர் சிறந்த கவிஞர்கள். கல்லைச் சிலையாக்கிக் கருத்தைக் கிளரச் செய்யும் உயர்ந்த சிற்பிகள். அந்நியருக்கு அடிபணியாத ஆண்மையாளர்கள். அந்நாட்டின் பெண்கள் அடக்கமும், அன்பும், கற்புநெறி தவறாத பண்பும்மிகுந்தவர்கள். இத்தகைய ஓர் சிறந்த பண்பாடும், நாகரிகமும் மிக்கவர்கள் அந்நியரிடம் அடங்கியிருக்க, நாமென்ன ஆமைகளா? ஆண்மையற்றவர்களா? ஆர்த்தெழுங்கள் தோழர்களே! அந்நியரை விரட்டுவோம்! அன்னை நாட்டை மீட்போம்!" என்று புரட்சிக் கனல் தெறிக்க உரிமை முழக்கம் செய்திருந்தான் ரிசால்!

1887-ம் ஆண்டில்தான் அதை முதல் முதலில் வெளியிட்டான். அந் நூலைக் கண்டு ஆட்சியே அலறியது. அந்த நூல் நாட்டினுள்ளே வரலாகாது என்று தடை விதித்தனர் ஸ்பானியர். அந்த நூலைப் படித்தாலோ, அல்லது படிப்பவர் பக்கமிருந்து கேட்டாலோ, அவர்கள் செல்வம் முழுவதும் பறிமுதல் செய்வதோடு, நாடு கடத்தப்படுவார்கள். அந்நூலை வைத்திருப்பவர்களைத் தெரிவித்தால் அவர்களுக்கு நிறையப் பரிசளிக்கப்படும் என்று ஓர் சட்டமிட்டு அதை நாடறியச் செய்தார்கள். ஆயினும் இரவு நேரங்களில் யாருமறியாவண்ணம் பிலிப்பைனர் பலர் அந் நூலை மறைவாகப் படித்தனர். படித்து நாட்டுணர்ச்சி பெற்றனர். பெற்றவர்கள் ஒன்றுகூடித் தனியரசுக் கழகம் ஒன்றை உருவாக்கி அதன் தலைமைப் பதவியை ஏற்கும்படி ரிசாலுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினர். அதற்கு ரிசால் "நான் தலைவனாக இருக்க விரும்பவில்லை; சாதாரணத் தொண்டனாகவே இருக்க விரும்புகிறேன்! என்னை மன்னியுங்கள்!" என்று பதில் எழுதி அனுப்பிவிட்டான்!

ரிசால் அழகிய தோற்றமும், அகன்ற நெற்றியும், அன்பு சொரியும் கண்களும், எவரையும் விரைவில் மயங்கவைத்துவிடும். நகைச் சுவையுடன் தெளிவாகவும், அழகாகவும் பேசுவதில் ஈடு இணையற்றவன். அவனுடைய அழகிய உருவத்தைக் கண்டு பிலிப்பைன் நாட்டு அழகி ஒருத்தி தன் உள்ளத்தையும், உடலையும் அவனிடம் ஒப்படைத்தாள். ரிசாலும் அவளை உயிரினும் மேலாக நேசித்து வந்தான். வெளிநாடுகட்குப் படிக்கச் சென்றிருந்தபோதும் அடிக்கடி அவளுக்குப் பல காதற் கடிதங்கள் எழுதிக் குவித்துக்கொண்டிருந்தான். ஆனாலும் அந்த அழகியின் தாய் அவனை வெறுத்தாள்; ஏனெனில் அவனொரு புதுமையாளன், புரட்சியாளன்; அவனைச் சாவு எந்த நேரத்திலும் அணைத்துக்கொள்ளும் என்ற அச்சத்தால். ரிசால் எழுதும் காதற் கடிதங்கள் அனைத்தையும் படித்துப் பார்த்துவிட்டுத் தீயிலிட்டுப் பொசுக்கிவிடுவாள் அந்த அழகியின் அன்னை. தன் அருமைக் காதலனிடமிருந்து ஒரு கடிதம்கூட வரவில்லையே என்று கசிந்துருகிக் கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தாள் அந்தக் கட்டழகி. அந்நிய நாட்டு ஆடலழகிகளின் வலையில் சிக்கிவிட்டானோவென்று ஐயப்பட்டாள் அந்த ஆரணங்கு. ரிசாலைப்பற்றிப்பொய்யுரைகளைவிடாது புனைந்துரைத்துக்கொண்டிருந்தாள் அவளுடைய தாய். அதை அவளால் நம்பமுடியவில்லை — ஆயினும் ஒன்றும் புரியாது குழம்பினாள். இந்நேரத்தில் அவள் தாய் அவளைக் கட்டாயப்படுத்தி வேறொருவனுக்கு மணம்செய்து வைத்தாள். மங்கையின் மனம் மாறவில்லை. மனதுக் கிசைந்தவனை மணக்க முடியவில்லையே என்ற மாறாத மனக்குழப்பத்தால் நாளுக்கு நாள் மெலிந்தாள். ரிசாலின் நினைவால் உடல் தளர்ந்தாள். சில மாதங்களில் நோயுற்று அந்த எழிலும் இளமையும் நிறைந்த இள நங்கை இறந்தாள்.

தன் காதலி இறந்தாள் என்ற செய்திகேட்டு உலகமே இருண்டுவிட்டதுபோல் கலங்கினான், மலை குலைந்தாலும் நிலை குலையாத மாவீரன் ரிசால்! அப்பொழுது மனக்கலக்கத்துடன், கருகிய தன் காதலைப் பற்றியும், கயவர்தம் கையில் சிக்கிய தன் நாட்டைப் பற்றியும் மிக உருக்கமாக "எல் பிலிபஸ்ட் ரிஸ்மோ" என்ற ஓர் புகழ்பெற்ற நாவலை உருவாக்கி 1891-ம் ஆண்டு வெளியிட்டான். அந்நேரத்தில் அவன் தாயிடமிருந்து அவனுக்கு ஒரு கடிதம்

வந்தது. அதில் "மகனே! உடல் நலிவுற்று இருக்கிறேன். என் வாழ்வில் ஒளியேற்ற ஓடிவா!" என்றிருந்தது. கடிதத்தைக் கண்டதும் தன் தாயைக்காணத் தாயகம் திரும்பினன். தாயின் உடலையும் சீர்ப்படுத்தினன்.

1892-ம் ஆண்டு ஜூலை மாதம் ரிசால் தன் வீட்டில், பிலிப்பைன் தேசத்து இளைஞர்களையும், தொழிலாளர்களையும் ஒன்று திரட்டித் தன் திட்டத்தைக் கூறினன். "பிலிப்பைனர் இரகசிய சங்கம்" என்றொரு அமைப்பை ஏற்படுத்தி குழுக்கள் அமைத்து நாடு முழுதும் சூறாவளிப் பிரசாரம் செய்துவந்தான். திடீரென்று ஒரு நாள் ரிசால் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டான். அப்போது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று தன் நாட்டில் அந்நியர்கள் செய்யும் கொடுமைகளை எடுத்துரைத்தான். பின்னர் சீனுவிற்குச் சென்று ஹாங்காங்கில் கண்வைத்தியத் தொழிலை நடத்தி அதில் வந்த ஏராளமான பணத்தையும் தன் நாட்டிற்காகவே செலவு செய்தான். அந்தச் சமயத்தில் விடுதலை எழுச்சி மிக்க பல நூல்களை இயற்றி வெளியிட்டான். பல பத்திரிகைகளில் நாடு விடுதலை பெறவேண்டிய அவசியம் குறித்து உணர்ச்சிகரமான கட்டுரைகளை எழுதினன். இதைக் கண்ட ஸ்பானியர் ஆட்சி மீண்டும் அலறியது. கடைசியில் ரிசாலின் உறவினர்களையெல்லாம் சிறையில் தள்ளிக் கொடுமைப்படுத்தினர் ஸ்பானியர்.

"என்மேல் உள்ள கோபத்தால் என் உறவினர்களைச் சிறையில் அடைத்துக் கொடுமை செய்கிறதே இந்தக் கொடுங்கோலர் ஆட்சி" என்றெண்ணி, மணிலா நகர் வந்தடைந்தான் அந்த மாமேதை! சிங்கம் தானே வந்து கூண்டிற்குள் சிக்கிவிட்டதே என்ற பூரிப்பால் ரிசாலைச் சிறைப்பிடித்து டாபிடான் என்ற ஊரில் சிறைவைத்தனர். அந்த ஊரைச் சுற்றிப் பார்க்க மட்டும் அவனுக்கு அரசாங்கம் அனுமதியளித்தது.

இந்நிலையில் கண் வைத்தியத்திறகாக ஓர் ஆரணங்கு அவனிடம் அடிக்கடி வந்துகொண்டிருந்தாள். அம்மலர் விழியாள் அவனை விரும்புவதை அறிந்ததும், அவனுள்ளத்தில் மங்கி மறைந்திருந்த காதலுணர்வு மீண்டும் மலர ஆரம்பித்தது. சிறிது காலத்தில் அந்த மனங்கவர்ந்தாளையே மணந்துகொண்டான். கருத்தொத்த அக்கட்டழகியும் கணவனுடன் பொது வாழ்வில் ஈடுபட்டாள்.

புரட்சிப் பாக்களை இயற்றி இரகசியமாக நண்பர்களோடு நாடறிய வெளியிட்டான் ரிசால்! அதில் "புறப்படுங்கள் களம் நோக்கி, என்னரும் பிலிப்பைனர்களே! புதுவாழ்வு பெறுவோம்! புல்லர்களை விரட்டுவோம்! புனிதப்போர் தொடுப்போம்!" என்று விடுதலைப் பண் பாடினன். இக்கருத்துக்கள் பிலிப்பைனரின் நரம்புகளிலே சென்று முறுக்கேற்றின. கோழை வீரனானன்! நாடு கொந்தளித்தது! புரட்சி! எங்கும் புரட்சி!!

1896-ம் ஆண்டு ரிசாலும், அவன் மனைவியும் டாபிடானிலிருந்து மணிலா நகர் வந்தடைந்தார்கள். அரசாங்கம் விடுதலை வீரர்களைப் பிடித்துக் கடுமையாகத் தண்டித்தது. பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ரிசாலைக் கைதியாக்கிச் சிறையில் அடைத்தனர். இராணுவ நீதிமன்றத்தில் வழக்கு நடந்து அவன் மீது இரண்டு குற்றங்கள் சாட்டப்பட்டன. "அரசியல் சட்டத்திற்கு விரோதமாக "பிலிப்பைனர் இரகசியசங்கம்" என்றொரு அமைப்பை ஏற்படுத்தியது முதல் குற்றம். எங்கள் ஆட்சியின் துப்பாக்கியை எதிர்க்கின்ற அளவுக்கு பெரும் புரட்சியை உண்டாக்கியது உன் பேனா — இது இரண்டாவது குற்றம்."

இந்த இரண்டு குற்றங்களுக்கும் நாளை 1896-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் நாள் காலை கதிரவன் எழ ரிசால் சுட்டுக் கொல்லப்பட வேண்டும் என்று இராணுவக் கோர்ட் தீர்ப்புக் கூறியது.

காலை மலர்ந்தது. சாண்டியாக்கோ கோட்டையிலிருந்து தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டான் கால்நடையாக. தூக்குமேடையில் ஏறி ஒளி பொருந்தியகண்களோடு நிமிர்ந்து பார்த்தான் ரிசால்! ஒரு பக்கத்தில் அவனது அன்னையும், அருமை மனைவியும், அன்புத் தந்தையும் அழுதபடியே நின்றிருந்தனர். மற்றொரு பக்கம் உறவினர்களும், நண்பர்களும், பிலிப்பைனர்களும் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில் ரிசாலை நோக்கி "நீ ஏதாவது பேசுவதாயின் சிறிது நேரம் பேச அனுமதி இருக்கிறது," என்றான் ஸ்பானிய அதிகாரி. ரிசால் மிகவும் உருக்கமுடன் பேச ஆரம்பித்தான்.

"என்னரும்பிலிப்பைன்மக்களே! இன்னும் கொஞ்ச நேரத்தில் என்னை, அந்நியர் ஸ்பானியர் சுட்டுக் கொல்லப்போகிருர்கள். அதைக்கண்டு நான் அஞ்சவில்லை. அன்னை நாடு அடிமை நாடாய் அந்நியர் பிடியில் இருக்கக் கண்டும் வாளா இருப்பவன், அம்மண்ணில் பிறந்தவன் என்று நினைத்துக் கொள்வதற்கும், தன்னை ஒரு மனிதன் என்று கூறிக்கொள்வதற்கும் அருகதை அற்றவன்

---

மகா கவிகளைப்போலக் கனவு கண்டவர்களை எங்குமே காணமுடியாது. நம்முடைய அறிவுக்கெல்லாம் எட்டாத எத்தனையோ அற்புதமான கனவுகளை அவர்கள் கண்டுகொண்டே இருப்பார்கள். உலகிலே எங்கும் காணமுடியாத ஒரு மகோந்நதமான நாட்டை மகாகவிகள் தங்கள் காவியத்திலே உண்டாக்கி விடுவார்கள். கோடானுகோடி செலவில், நூற்றுக்கணக்கான தச்சர்கள்கூடிப் பல்லாயிரக்கணக்கான வேலையாட்களைக் கொண்டு நிர்மாணிக்கிற பெரிய பெரிய நகரங்களும், அங்கு காணப்படும் அழகோவியங்களும் சிதைந்து அழிந்துமறைந்து மண்ணோடு மண்ணாய்ப் போனாலுங்கூட, இந்தக கவித்தச்சர்கள் கட்டிய மாளிகைகளும் உயிரோவியங்களும் அழியாத நிலையைப் பெற்றுவிடுகின்றன. ஆகவேதான் அறிஞர்களைப் பாராட்டுகிற உலகம் மேதைகளை வணங்குகிறது; புலவர்களை வாழ்த்துகிற உலகம் கவிஞர்களை ஏத்துகிறது.

என்பது என் கருத்து. கடைசியாக இந்த அற்ப ஆசைக்காரர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். விடுதலை வீரர்களை, யாராவது துப்பாக்கியைக் காட்டியோ, தூக்குமேடையில் நிறுத்தியோ அவர்கள் உள்ளத்தை மாற்றமுடியும் என்று நினைத்தால், அது அவர்கள் அறியாமையையே எடுத்துக்காட்டும். தாயக உணர்ச்சியுடையவர்களை, ஆணவக்காரர்களே! அவர்களின் அங்கங்களை அணுவணுவாக அறுத்தெறிந்தாலும் "விடுதலை, விடுதலை விடுதலை" என்ற உரிமைத்தாகம் தணியாது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

அடிமையாய் அந்நியருக்கு அடிபணிந்து, ஆமையாய் ஆண்மையற்றவர்களாய் வாழ்வதைவிட ஆதிக்கக்காரர்களை எதிர்த்து அழிவதே மேல்! விடுதலை என்பவரை, வீணர்களே! சுட்டு வீழ்த்தலாம். சுதந்திரம் வேண்டும் என்போரை, சூதுக்காரர்களே! தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லலாம். நாடு என்பவரை ஓடு என்று நாடுகடத்தலாம். உரிமை என்போரை உயிர் போகும் வரை உதைக்கலாம். உலுத்தர்களே! அவர்களின் உள்ள உறுதியை மாற்ற முடியுமா உங்களால்?

தணலின்மேல் நிறுத்தி, தடியால் அடித்து மண்டையை உடைத்து, இரு விழிகளையும் பிடுங்கி, நாடு கேட்பாயா? என்றால் அப்பொழுதும், நான் மட்டுமல்ல, என் உடலிலிருந்து வழியும் ஒவ்வொரு துளி இரத்தமும் நாடு நாடென்றே முழங்கும். இன்று இந்த ரிசாலைச்சுட்டு வீழ்த்தலாம். ஆனால் அவன் கூறிய கருத்துக்கள் உலவிக்கொண்டே இருக்கும் கடைசி பிலிப்பைனன் ஒருவன் இருக்கும் வரை! என்னைப்போல் தோன்றிக்கொண்டே இருப்பார்களே, அவர்களுக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.........

அன்னையே!... அறிவிற் சிறந்த தந்தையே!......அறுசுவை உணவளித்து அறிவைப் புகட்டி அன்புடன் வளர்த்தீர்கள் என்னை. உங்கள் அன்புத் திருமகன் அன்னை நாட்டை மீட்கத் தன் ஆவியைத் துறந்தான் என்று கூறிப் பெருமைப்படுங்கள்! புளகாங்கிதம் எய்துங்கள்!

என்னரும் மனைவியே! என்னுயிரே! கலங்காதே! கண்ணீர் விடாதே. தன் கணவன், தாய் நாட்டிற்குத் தன்னுயிரைத் தருவதையே கடமையாக, பெருமையாக எண்ணுகிறானே என்று எண்ணிப் பூரிப்படை!

நண்பர்களே! அன்னை நாட்டில் அந்நியர்கள் அரைக்கணமும் இருக்கச் சம்மதிக்காதீர்கள்! நாடு மீட்டு நலம்பெற்று வாழுங்கள்! நான் செய்யவேண்டிய கடமை முடிகிறது. தொடர்ந்து செயலாற்றுங்கள். என்னைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்!

அன்னைத் திருநாடே! இதுவரை உன் அடிமைத்தளையை அறுக்கப் பாடுபட்டேன். இன்று உன்னைப் பிரிகிறேன். விடுதலை பெற்று நீ நீடுழி வாழ்க!

என்று ஆவேசமாகப்பேசி முடித்தான். ஸ்பானிய இராணுவ அதிகாரி உத்தரவிட்டதும் சிப்பாய்கள் ரிசாலை நோக்கிச் சுட்டார்கள். மாவீரன் கீழே சாய்ந்தான்.

அடங்கியிருந்த புரட்சி மீண்டும் அனல் கக்கியது. அந்நியர்களைக் கண்ட இடங்களில் அடித்தார்கள்; சுட்டார்கள். அவர்கள் வாழும் இடங்களைச் சுட்டுப் பொசுக்கினார்கள். இந்தப் புரட்சிக்கு ரிசாலின் மனைவியே தலைமை வகித்தாள். ஆயுத நிலையங்களைப் பிடித்துக்கொண்டனர். விடுதலை வீரனைத் தூக்கிலேற்றிய தூக்குமேடை சுக்குநூறாக்கப்பட்டது. சூதுக்காரர்கள் ஒழிந்தார்கள்; சுதந்திரம் பெற்றார்கள்.

ரிசாலின் கல்லறையின் அருகே வானளாவிப் பறந்துகொண்டிருந்த சுதந்திரக்கொடியைக் கண்டதும் எல்லோரும் தலைவணங்கி, கல்லறைமீது மாலை அணிவித்து மரியாதை செய்தனர். ரிசாலின் மனைவியின் கண்களில் மட்டும் நீர் தாரைதாரையாக வழிந்து கொண்டிருந்தது. தன் கணவன் மட்டும் மடியாமலிருந்திருந்தால் நாடு சுதந்திரம் பெற்றிருக்க முடியுமாஎன்று நினைத்ததும், அவளையும் அறியாமல் ஒருவித இன்பம் அடைந்தாள்!

8-ம் பக்கத் தொடர்ச்சி

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தரையே பிளந்து நான் அதில் விழுவதுபோல் இருந்தது. மூச்சு நின்றுவிடுமோ என்றுகூட ஆகிவிட்டது. தங்கம் ஒன்றும் புரியாமல் திடுக்கிட்டாள்.

“தங்கம் நீ என் மகள்தானம்மா—இந்தப் பாவி பெற்றெடுத்த மகளம்மா! வாம்மா நான் எல்லாம் விபரமாகச் சொல்கிறேன்” என்று சொல்லி அவளை அழைத்துச் சென்றாள்.

“ஏண்டா உன் தங்கச்சியையே கலியாணம் செய்துகொள்ளப் பார்த்தியேடா முட்டாளே! இதற்குத்தாண்டா எதற்கும் பெரியவங்களுக்குத் தெரியாமே ஒன்றும் செய்யக்கூடாதுன்னு சொல்வது” என்று சொல்லிக் கொண்டே உள்ளே போய்விட்டாள்.

தங்கத்தைப் பாயில் உட்காரவைத்துக் காப்பியைக் கொடுத்து தன் கதை முழுவதும் சொன்னாள். நான் வெளியிலிருந்தே கேட்டுக்கொண்டிருந்தேன். ஏனென்றால் எனக்கே வெட்கமாக இருந்தது நான் செய்தது ஒவ்வொன்றும்.

இருப்பினும் நான் இழந்த தங்கையைப் பெற்றுவிட்டேன், தந்தையைப் பெறாவிடினும்!

என் தந்தை நானும் தங்கமும் சிறுவர்களாக இருக்கும்போது அடிக்கடி வீட்டைவிட்டுப் போய் விடுவாராம். என் தாய்க்குப் பிறகுதான் தெரியவந்தது, அவர் மற்றொருத்தியிடம் சிநேகிதம் கொண்டிருக்கிறார் என்பது. மறைமுகமாகச் சொல்லிப் பார்த்தார்களாம் என் தாய். கேட்கவில்லையாம் அவர்.

என் தந்தைக்கு என்னைவிடத் தங்கத்தின்மீது அதிக ஆசையாம். ஆசையின் காரணத்தால் அவளைத் தூக்கிக்கொண்டு போனவர் ஒரு நாள், திரும்பி வரவேயில்லையாம். சில நாட்கள் கழித்து அவர்கள் ஊரைவிட்டே புறப்பட்டுப் போய்விட்டார்கள்—பிறகு அவர்களின் செய்தி ஒன்றுமே தெரியவில்லையாம். தந்தையாரின் ஆசை நாயகியின் பெயர் “அகிலாண்டம் அம்மாளாம்;”

எனக்கு எல்லாம் புரிந்தது—வெட்கத்தினால் என் தலையும் குனிந்தது — இனி தங்கம்—என் தங்கத் தங்கை.

# பண்ணைக்காரன்!

—[வேலை. எஸ். எழில்]—

முதலாளித்துவத்தை எந்த மனிதனும் எக்காலத்தும் முழுமனதாக ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. உழைப்பை வாழ்வாக்கும் மனிதன் முதலாளித்துவத்தைச் சுக்குநூருக்க முடியாத சமயங்களில் முணுமுணுத்தும்—வரட்டுச் சிரிப்புச் சிரித்தும் எதிர்த்து வந்திருக்கிருன். காலத்தையும் இடத்தையும் கடந்து—உலக முழுவதும் இந்த நிலை உயிர்த் துடிப்போடு நிகழ்ந்தபடிதானுள்ளது.

எதையும் எதிர்ப்பதில் மனிதர்களில் இருவகை உண்டு. ஒன்று—எடுத்தேன் கவிழ்த்தேன் என்று நேருக்கு நேர் புலியெனப் பாய்பவர்கள். மற்ற வகையினர்—என்னதான் தலைபோவதாஞலும், போதைச் சிரிப்போடு, நயந்து நெளிந்து சமயம் வாய்க்கும்போது பழிவாங்குபவர்கள். இத்தகு மனிதர்களை நாம் நிதமும் வாழ்வுச் சந்தையில் சந்திக்கத் தவறுவதில்லை.எழுத்தாளர்களும் இவர்களைச் சித்தரிக்காமல் விட்டதில்லை.

முதலாளி வர்க்கத்தை'முகமன்' கூறி வரவேற்று, வணங்கி—கேலியும் கிண்டலும் செய்த மனிதர்களை நாம் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறேம். அந்தச்சக்தி வாய்ந்த பூர்சுவாக்களை எதிர்க்க முடியாத எளியவர்கள் — எள்ளி நகையாடியிருக்கிறுர்கள். நகையாடிய உழைப்பாளர்களை—நல்லவர்கள் என்றே நம்பினர் அந்தப் பூர்சுவாக்கள். முதலாளி என்றதுமே ஒரு பயங்கரமான தோற்றம் தோன்றுவது இயற்கை. ஏழை எளியவர்களின் எசமான் எப்படிப்பட்டவன் என்பதை நாமறிவோம். என்ருலும் அந்த எசமானனை அந்த எளிய உழவர்களின் வாயால் கேட்பது சுவையுடையது அல்லவா?

17-ம், 18-ம் நூற்ருண்டுக்காலங்களில் தமிழகத்தில் பண்ணைக்காரர்கள் எனும் நிலப்பிரபுக்கள் வாழ்ந்துவந்தனர் என்பது வரலாறு. இன்றும் அவர்கள் மிட்டா மிராசு ஜமீன்தார்கள் என உலவுவது தெரிந்ததே. அன்றைய பண்ணைக்காரர்களை — பள்ளர்கள் அதாவது விவசாயப் பெருங்குடிமக்கள் வரவேற்று வணங்கிய முறைகளைச் சிறிது கவனிப்போம். அப் பண்னைக்காரர்களை நாம் இன்று காவிய உருவில் கண்டு களிப்போம்.

நிற்க, இதற்கு முன் சில வார்த்தைகள். கவிதைகளை ஓர் ஆவலோடு சுவைப்பதில் தணியாத ஆசை. கவிதை எப்பொருளைக் குறித்து எழுதியிருந்தாலும் சரி முதலில் அதன் நயங்களை அனுபவிப்பதில் ஆர்வமுண்டு. குறிப்பாக ஏழை எளிய மக்களைக் குறித்துவரும் பாக்களை மிகுந்த ஆவலோடு படிப்பதில் தனிப் பிரியம். சில மேதைகள் சொல்வதைப் போன்று சாதாரண மக்களின் சாதாரண நிகழ்ச்சிகளை, உணர்ச்சிகளை — உருவகித்து உயிரூட்டிப் பாக்களியற்றுவது 'பேதைமை' எனும் கொள்கையை ஒப்பமுடியவில்லை. ஏழை எளியவர்களின் 'சாவா-வாழ்வா'ப் போராட்டங்கள் சிலருக்கு விளையாட்டாகத் தோற்றலாம். ஆனுல் எம்போன்ருர்க்கு அந்த வாழ்வின் வேதனையை உணரும் உள்ளம் இருக்கிறது. அசாதாரண கற்பனைகளையும் காணுதவைதயும்—வேண்டாதவையும் கவிகளாக்கும் 'பண்பு' அந்த மேதையர்க்கே உரித்தாகட்டும்.

முதலில்குறித்தபடி முதலாளித்துவத்தைக் கேலிக் கணைகளால் துளைக்க முயன்றவர்கள் ஏழை உழவர்கள். நேருக்குநேர் எதிர்க்க முடியாத பண்ணைக்காரர்களை—நகைசொட்டும் பாடல்களால் எதிர்த்த இரண்டாம் வகையினர் இந்தப் பள்ளர்கள். இந்த ஏழை எளியவர்கள் எங்ஙனம் தங்கள் உணர்ச்சிகளைச் சாதாரண 'பாவனை'யில் வெளிப்படுத்திக் கொண்டார்கள் என்பதை அனுதாப இதயங்கொண்டோர் காண்பார்களாக. சாதாரண மக்களின் உணர்வுகளைக் கவிதையாக்கியுள்ள புலவரை—சாதாரண மக்கள், சாதாரண மனமகிழ்வோடு வாழ்த்துவார்களாக.

'முக்கூடற்பள்ளு' எனும் நூலின் பெயரைப் பலர் அறிந்திருக்கலாம். அதன் காலம் ஏறக்குறையப் பதினேழாம் நூற்ருண்டின் முடிவுக்காலம். திருநெல்வேலிச் சீமையில் முக்கூடல் எனும் சிற்றூர் அப்பொழுது சிறப்புடன் திகழ்ந்தது. முக்கூடலில் வாழ்ந்த ஒரு பண்ணைக்காரனை — அவன் பண்ணையில் பயிர் செய்யும் பள்ளர்கள் போற்றி வணங்கினர். பள்ளு நூலில் பல வித நயங்கள் தெறிக்கின்றன. எனினும் இங்கே நாம் பண்ணைக்காரனை மட்டுமே கவனிப்போம். பள்ளர்கள் வணங்கி வரவேற்ற 'நயத்தை' பாடலாக்கிய புலவரின் பெயர் தெரியவில்லை.

பண்ணைக்காரர் வருகிருர். வயலில் வேலை செய்யும் பள்ளரும் பள்ளியரும் எச்சரிக்கையாகின்றனர். விறுவிறுவென்று வேலைகளைச் செய்கின்றனர். இத்தனை நேரமும் இருந்த துடிப்பும் பிடிப்பும் பறந்துபோகிறது. ஓரக்கண்களால் பண்ணையாரைப் பார்த்து உதட்டுக்குள் சிரித்துக்கொள்கின்றனர். 'முசுமுசு'வென்று பேச்சொலி ஊர்கிறது. பண்ணையார் அசைந்து அசைந்து வரப்பின் மேல் வருகிருர். அவர் வந்து வேலை செய்வோரை அடைவதற்கு இன்னும் சிறிது நேரமாவது ஆகும். அதற்குள் செம்மி

மகன் பண்ணையாரை வரவேற்கத் தயாராகிறான். ஏன் பாடவே செய்கிறான.

மாறு கண்ணும் பருத்திப்பையின்
கூறை வயிறும்—கீரை
 மத்துப்போல் தலையும் சுரை
 வித்துப் போல் பல்லும்
நீறுபோல் வெளுத்த ஊளை
யூறு நாசியும்—தட்டி
 நெரித்தமாங் கொட்டைபோல் ஈ
 அரித்த வாயும்
தாறு மாறுப் மீசையில் அஞ்
சாறு மயிரும்—தூங்கற்
 சண்டைக் கிடாப்போல் நடையும்
 மொண்ணை முகமும்
வேறு கீறி ஒட்டவைத்த
ஏறு காது மாய்—நேமி
 வீரனார் முக்கூடற் பண்ணைக்
 காரனார் வந்தார்.

பண்ணைக்காரனார் வந்தார்! வந்தார்! வந்தார்! என்று மேல்ஸ்தாதியில் பாடி நிறுத்தினான். பண்ணைக்காரர் வெகு மகிழ்ச்சியோடு வந்து சேர்ந்தார். பள்ளர் முகங்களில் ஒரே கேலிக்குறி. "யாரடா வந்தார்! வந்தார்! என்று எக்களிக்கிறாய்?" குரல் கொடுத்தார் பண்ணையார்.

"வேறுயாரு சாமி வருவார்! எங்க முக்கூடல் பண்ணை வீரனார் தான் வந்தார்! வந்தார்!" என்றான் செம்மி மகன். பண்ணையாருக்கு ஏற்பட்ட சந்தோஷத்தில் ஒரு சுத்து பருத்தது. பள்ளியர்கள் பல் தெரியச் சிரித்தனர். பண்ணைக்காரர் எல்லோரையும் ஒரு நோட்டம் விட்டு மோப்பம் பிடிக்கலானார். அதற்குள் அவரை நாம் ஒரு நோட்டம் பார்ப்போம்.

அடடா, அந்த செம்மி மகனுக்குத்தான் எத்தனை நல்ல சாரீரம், அந்தப் பாடலில்தான்...சித்திரக்காரனின் கை வண்ணத் துடிப்பு வெடிக்கிறதே! பண்ணைக்காரரின் ஓரக்கண்ணையும்; பருத்தி மூட்டை வயிறையும்! மத்தன்ன தலையையும்; சுரைவித்தன்ன பல்லையும்; ஊளையொழுகும் மூக்கையும்; மாங்கொட்டை வாயில் ஈ மொய்ப்பதையும்; அங்கும் இங்குமாக முளைவிட்டுள்ள மீசை வரிசையையும்; கொழுத்த கிடா நடையையும் மொண்ணை முகமும்; ஏறுமாறான காதுகளும்..." பண்ணைக்காரனை நம்முன்னே கொணர்ந்து சிரிக்க வைக்கிறது அல்லவா? அந்தச் செம்மி மகன் வார்த்தைகளில் தான் எத்தனை கேலி! எவ்வளவு கிண்டல்! இப்படியொரு உருவம் உயிர்பெற்று நம்முன்னே வருமாயின் — நாம் என்ன செய்வோம்? நாடகத்திலோ சினிமாவிலோ— இப்படியொரு பண்ணைக்காரர் வந்தால் நாமெல்லாம் சிரிபபோம்! வயிறு வலிக்கும்வரை சிரிப்போம்! கொஞ்சம் சிந்தியுங்கள், கற்பனையைச் சிறிது பறக்கவிடுங்கள். மனக் கண்களில் இப்படியொரு உருவைச் சமையுங்கள், தானாக வாய்விட்டுச் சிரிப்பீர்கள். அந்த ஏழைப் பாட்டாளி எத்தனை தத்ரூபமாகச் சிருஷ்டித்து விட்டான் அவரை. எளிமையான வர்ணனை-எள்ளிநகைசொட்டும்சொல்லடுக்கு பழிவாங்க முடியாத பள்ளர்கள்— பண்ணையாரை இப்படிப் பழி வாங்குகின்றனர்.

பண்ணைக்காரர் தன் கண்ணோட்டத்தை முடித்துக்கொண்டார். பள்ளர்களிடையே ஒரு கலகலப்பு ஏற்பட்டது. கறுப்பி உதட்டில் சிரிப்புத் தவழக் கூட்டத்திற்கு முன்னே வந்தாள். பண்ணைக்காரர் அவளை அப்படியே அள்ளி விழுங்கினார். அவள் நமட்டுச் சிரிப்புச் சிரித்தாள். சுரைவித்துப் பற்களை வெளிச்சத்தில் காட்டிக் கெக்கலித்தார் பண்ணையார். அந்தச் சிரிப்பினூடே கறுப்பி தன் குயில் குரலை தடவிவிட்டாள். பாடல் ரீங்காரமிட்டது.

மூத்தபள்ளி முகம் பார்த்து
வார்த்தை சொல்வா ராம்—பெரு
 மூச்சுக் கொண்டிளைய பள்ளி
 பேச்சுக் கேட்பா ராம்.
சாத்தி மகள் காத்தி தன்னைப்
பேத்தி என்பா ராம்—மெல்லச்
 சன்னையாய்க் களத்தில் வாடி
 பின்னை என்பா ராம்.
வாய்த்த தடிக் கம்பை யூன்றிச்
சாய்த்துப் பார்ப்பா ராம்—ஊத்தை
 வாய்க்கு மெல்லப் புகை குடிக்கத்
 தீக்குப் போவா ராம்.
காத்தி ராத பள்ளன் பர
மார்த்தி என்பா ராம்—குச்சிற்
 கண்ணைச் சாய்ப்பா ராம் முக்கூடற்
 பண்ணைக் காரனார்.

(சன்னை—சைகை
பரமார்த்தி—உலகம் அறியாதவன்.)

சிந்து முடிந்தது. கறுப்பி தலை குனிந்து கொண்டாள். பள்ளர்கள் பல்லெல்லாம் பளிச்சிடச் சிரித்தனர். பண்ணையார் இளித்தார். பருத்தி மூட்டை வயிறு குலுங்கியது. நிலம்கூட ஒருமுறை சிரித்தது.

"கறுப்பி; மகாகுறும்புக்காரியடி நீ" சிரித்துச் சொன்னார் பண்ணையார். எல்லோரும் கறுப்பியைக் கவனித்தனர். அவள் கேலிக்குறியுடன் கூட்டத்தினுள் புகுந்தாள்.

பணக்காரர்கள் பணத் திமிரினால் எதையும் செய்யலாம் என்ற மமதை கொண்டவர்கள் என்பது வழக்கு. பண்ணைக்காரரின் செருக்கை, செயல்களைப் பாடலில் சித்தரித்தாள் கறுப்பி. பாடலில் சிரிப்பு நெளிந்தது. அவர் யார் யாரை எப்படியெப்படி எல்லாம் அழைப்பார், அனுபவிப்பார் என்பதைத் தெள்ளிதின் புலனாக்கினாள் கறுப்பி. அவரோ, அதில் தான் தம்முடைய மதிப்பும், சிறப்பும் இருப்பதாக எண்ணி மகிழ்ந்தார்.

சாதாரண ஒரு உழத்தி தன் எசமானின் செயல்களை உருவாக்கிய முறையே அலாதிதான். மனத்தில் பீறிட்டுக் கிளம்பும் உணர்ச்சிகளை நகைச்சுவையோடு குழைத்துப் பாடினாள் அவள். அடக்கி ஒடுக்கப்பட்ட பழியுணர்ச்சி--சிரிப்பாக, சிந்தனையாக வெடித்தது அங்கே. இதயத்தில் குமுங்கிய வேதனைத் தீ—உவகைப் பொறிகளாகக் கிளம்பிற்று. கேலியும் கிண்டலுமாக உந்திக் கிளம்பிய உரிமையுணர்ச்சி அது!

உழவர்களின் உள்ளங்களில் பற்றியெரிந்த உரிமைத் தீ— அன்று நகைச்சுவையாக, கேலி, கிண்டல் கணைகளாகப் பாய்ந்தது. இன்றோ—புரட்சித் தீயாக பற்றி எரிகிறது. காலத்தின் கோலம் நிலைமைகளை மாற்றி அமைக்கிறது. பல்லிளித்து பண்ணையாரைப் பார்த்துப் பதுங்கிய காலம்மாறி, பாயத் துடிக்கும்-பரிகாரம் தேடும் பக்குவம் வளர்ந்திருக்கிறது. பண்ணையாரைக் கண்டு முணுமுணுக்கும் காலம் மறைந்து — முழக்கமிடும் காலம் வந்திருக்கிறது.

முக்கூடற்பள்ளுப்பாடிய புலவர் --உழவர்களின் உள்ளத்தெளிவை உணர்ந்திருக்கிறார். அவர்களிடையே நிலவிய உணர்ச்சி மயமான கொச்சை மொழிப் பாடல்களை இலக்கிய நயத்தோடு உருவகித்து உயிரூட்டியிருக்கிறார் புலவர். சாதாரண மக்களின் மனநெகிழ்வுகளை, உணர்வுகளை நீங்கள் சுவைக்கத்தான் செய்வீர்கள். நயத்தோடு பாடிய புலவரை நீங்கள் மறக்கப்போவதில்லை. அதோ பண்ணைக்காரர் வருகிறார் — வரவேற்றுப் பாடுங்கள்!

★

# வாளும் வலிமையும்

சென்னைப்பட்டணத்து 'மூர் மார்க்கட்' கடை ஒன்று. பழைய சாமான்கள் பலவகைப் பட்டவை அங்கே கூறு கூறுகக் குவிக்கப் பட்டிருக்கின்றன. ஒடிந்த துண்டுகள் ஒட்டவைத்த பகுதிகள், பயனற்றபாகங்கள், மினுமினுப்புக் குன்றுதவை, சொட்டையுடையன, இப்படி எத்தனை எத்தனையோ வகையானவை அங்கே கிடக்கின்றன. இன்னது இருக்கிறது இன்னது இல்லை என்று கடைக்காரனுக்குத் தெரியுமோ என்னவோ, புதியதாய்ப் பார்க்கின்றவர்களுக்குத் தெரியாது. இதன் பக்கத்தில் இது என்ற நியதியும் காணேம்; எதை எதையோ எப்படி எப்படியோ போட்டுவைத்திருக்கினருன். ஒருக்கால் பேத உணர்ச்சியற்றவனே!

ஒரு மூலையில் ஒடிந்த வாளின் துண்டு ஒன்று கிடக்கின்றது. அதன் பக்கத்திலே எழுத்தாணி ஒன்று இருக்கிறது. கடைக்காரன் எங்கோ திரும்பிப் பார்த்தபோது எழுத்தாணி வாளை நிமிர்ந்து பார்த்தது. "என்ன?" என்று கேட்பதுபோல வாள் குனிந்து பார்த்தது. "என்ன இருந்து என்ன, உன்னைவிட நானே பெரியவன்" என்றது எழுத்தாணி. "ஆமாம்" என்பதுபோல் வாள் வாளா இருந்துவிட்டது.

சில நாட்கள் சென்றன.

யாரோ ஒருவன் ஒருநாள் அந்த ஒடிசல் கடையைத் தேடிவந்தான். எதை எதையோ துழாவினன். வாளின் பக்கத்தில் இருந்த எழுத்தாணியை எடுத்துக் கடைக்காரனிடம் நெடுநேரம் மல்லுக்கு நின்று கொஞ்சம் சில்லறையைக் கொடுத்துவிட்டு அதை எடுத்துக் கொண்டு போனன். போகின்றபோது எழுத்தாணி வாளின் பக்கம் அலட்சியமாகப் பார்த்தது. "பார்த்தாயா உன்னை வேண்டுவார் இல்லை." என்று சொல்வது போல் இருந்தது அந்தப்பார்வை.

வாள் வாளா இருந்தது; சில நாட்கள் சென்றன.

முன்னே பெருமையோடு வெளியேறிய எழுத்தாணி மறுபடியும் வாளின் பக்கத்திலே வந்து முடங்கியது. இப்போது அது நசுங்கியிருந்தது; முனை முறிந்துபோயிருந்தது; கோணல் மாணலாக இருந்தது. இந்தமுறை அது வாளைப் பார்க்கவே ஆசைப்படவில்லை. அது பேசும் பேசும் என வாள் காத்துக்கிடந்தது. பேசவே இல்லை.

தானே பேச்சைத் தொடங்கலாம் என்று எண்ணியது வாள். "என்ன, எழுத்தாணியாரே—ஒரே மோன நிலை?" ஊகும்...... பதிலே இல்லை. "என்ன எழுத்தாணியாரே போகின்றபோது மிடுக்கோடு போனீர், வந்தபோது ஒடுங்கிப் போய் வந்தீரே, ஏன்?" என்றது.

பின்னும் இரண்டொரு முறை வற்புறுத்திக் கேட்ட பின்னர் தான் எழுத்தாணி வாய் மலர்ந்தது.

"ஒன்றுமில்லை நண்பரே; சண்டை" என்றது.

"என்னது சண்டையா?"

"ஆமாம்'

"எந்தக்களத்திலே போர்? யார் யாருக்கு? உம்மை ஏன் போர்க்களத்திற்குக் கூட்டிப்போனர்கள். பாட்டுப் பாடப்போனப் புலவர்களோடு நீரும் போனீர் போலும்"

"புலவர்களோடு போனது என்னவோ உண்மைதான் வாளாரே. அந்தப் புலவர்கள் போரைப் பற்றிப் பாடுவதை விட்டுவிட்டு யார் பாட்டுப் பெரியது என்று ஒருவருக்கொருவர் போர் இட்டுக் கொண்டனர்"

"போரிட வார்த்தை இருக்கிறது; வார்த்தை முற்றினல் நாங்கள் இருக்கிறேம். (வாள் இருக்கிறது) உமக்கென்ன இடையிலே காயம்?"

"அதுதானே அங்கே நடந்தது. அவர்கள் எழுத்தாணிகளாலேயே அடித்துக்கொண்டனர்; நான் இப்படி ஆனேன்" என்று சொல்லி இரண்டு துளி கண்ணீர் விட்டது.

கலகலவென நகைத்தபடி வாள் சொன்னதாவது: அட மனிதா சண்டைபோட நான் இருக்கும் போது எழுத்தாணியை ஏன் வாங்கிப் போனய்?"

*

பழமொழி: வாளைவிட வலியது எழுத்தாணி.

புது நீதி: எழுத்தாணி ஒன்றுக்கொன்று வலியது.

★

காதல் வயமாவதால் ஒரு பெண்ணின் கவர்ச்சி அதிகரிக்கிறது. ஆனல் காதல் வயப்படும் ஆணே உலகினர் கண்களில் மதிப்பிழந்துவிடுகிறுன். நண்பர்களைத் தொணதொணக்கிறுன். பிறமாதரின் நகைப்புக்கு அடிக்கடி அவன் இலக்காகிறுன். மனிதன் அளவுக்கு மீறிய ஒருமையுள்ளம் படைத்தவனுதலால் காதலில் அவன் தன்னையே மறந்துவிடுகிறுன். சில சமயம், அவனுடைய தீவிரப் போக்கு அவனை ஓர் அசடாகக் கூட ஆக்கிவிடுகிறது. தான் காதல் கற்பனை செய்துள்ள பெண்ணின் உருவம் ஒன்றையே அவன் காண்கிறுன்.

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளில் மட்டும் 700-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்!

# The School of English Learning

# ஆங்கிலக் கல்வி நிலையம்

**60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.**

## தமிழ்
## எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்
## ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி

அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

## இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து **17–10–58-ந் தேதி** வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள் **21–10–58-ந் தேதி** முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும் போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்—சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவதாக இருக்கும்" எனில் மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

**முக்கிய அறிவிப்பு:—**

1. 16-வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.
2. ஆதாரபூர்வமான ஒப்பற்ற இலக்கணப்பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம்.
3. இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும், எட்டு நயே பைசே (8-புதிய காசுகள்) தபால்பில்லை அனுப்பிப் பெறுக.

**ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில், உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.**


காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகம்